www.padippakam.com



# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரசில் செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய தொடக்கவுரை.

1993 *மாசி* 5-9

EPIC
BOX 95
95144 GARGES-LES-GONESSE CEDEX
FRANCE

வெளியீட்டுப்பிரிவு
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
**Eelam People's Revolutionary Liberation Front**

படிப்பகம்

www.padippakam.com

சமூக, பொருளாதார விடுதலை என்ற கருத்து வரட்டுச் சூத்திரமாகி, நடைமுறையில் பாரதூரமான ஒன்றாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில்; இனப் பிரச்சினையிலிருந்து அந்நியப்பட்டு ஒதுங்கிப் போய் விடக்கூடாது என்பது ஒரு பக்கத்திலும், இன விடுதலைப் போராட்டம் என்றபோக்கு ஒரு பக்கமாக இழுபட்டுச் சென்று இனவெறியாகவும், வெறும் பழிவாங்கல் நடவடிக்கைகளாகவும், அவலட்சணமாகி விடக்கூடாது; என்பது மறுபக்கத்திலும் எம்மால் வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனடிப்படையில் நாம் வகுத்த பாதைதான் எம்மை இவ்விரு வகையான எல்லைகட்கும் இட்டுச்செல்லாமல் சரியான நிலைப்பாட்டில் வைத்திருந்தது.

*தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்*

படிப்பகம்

www.padippakam.com

அன்பிற்கினிய தோழர்களே!

இன்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது இரண்டாவது காங்கிரசை நடத்துகின்றது என்ற விடயமே முதலில் ஒரு செய்தியைப் பறைசாற்றி நிற்கின்றது. எத்தனையோ இழப்புக்களுக்கு மத்தியிலும், எத்தனையோ அரசியல் சூறாவளிகளுக்கு மத்தியிலும், எவ்வளவோ கஷ்டங்கள் நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும், எமது ஸ்தாபனம் இன்றும் அன்று கொண்டிருந்த உறுதியோடு நிமிர்ந்து நிற்கின்றது. இதே போல் எதிர்காலத்திலும் தொடர்ந்து நிற்கும், போராடும், முன்னேறும் என்பதுதான் அந்த செய்தி. இந்த உறுதி எமது ஸ்தாபனத்தோடு உடன்பிறந்தது. இப்படி நான் சொல்லும் போது வெறும் வீராப்பு வசனமாக இதனை நான் சொல்லவில்லை. ஏனெனில் எமது உறுதி சூன்யத்தில் இருந்து தோன்றியது அல்ல. அதன் பின்னே ஒரு கொள்கை இருந்தது. அக்கொள்கைப் பற்றே எமது உறுதியாகப் பரிணமித்தது. அதனாலேயே இன்றும் எமது கட்சி நிலைத்து நிற்கின்றது. அது மாத்திரமின்றி எமது ஸ்தாபனத்தை பலர் அழித்து விட முனைந்தும் முடியவில்லை என்றால் அதற்கான காரணமும், எமக்கிருக்கக்கூடிய கொள்கைப் பிடிப்புத்தான். எமது ஸ்தாபனம் தனிமனிதர்களின் கூட்டமல்ல. தனி மனிதனை அழித்து விடலாம். எப்படிப்பட்ட வீரனையும் கூட இன்றைய உலகில் ஒரு சாதாரண கைத்துப்பாக்கியைக் கொண்டே அழித்து விடலாம். ஆனால் கொள்கையினை யாராலும் அழித்து



படிப்பகம்

www.padippakam.com

விடமுடியாது. ஏன், தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மை அழித்து விடலாம் என்ற கனவோடு எத்தனை தோழர்களை கொன்றொழித்தார்கள். இறுதியில் மிகவும் கயமைத் தனமாக எமது செயலார் நாயகம் தோழர் நாபாவையும் தானே கொன்று ஒழித்தார்கள். இறுதியில் அவர்கள் கண்டது என்ன? ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை இவர்களால் அழிக்க முடிந்ததா? அதன் முன்னணித் தோழர்கள் பலரை இழந்தும் இன்றும் எமது ஸ்தாபனம் ஜீவித்திருக்கின்றது; உறுதியுடன் போர் முரசறைகின்றதென்றால் அதன் அடிப்படை என்ன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதுதான் வரலாற்றின் இயக்க விதிகளைப் புரிந்து கொள்ளாத இத்தகைய பாசிசவாதிகளையும் திகைக்க வைக்கின்ற மர்மம். ஒரு கொள்ளைக் கூட்டத்தலைவனை அழித்து விடுவதால் அந்தக் கொள்ளைக் கூட்டத்தையே அழித்து விடலாம். ஆனால் ஒரு இயக்கத்தின் தலைவனை அழித்து விடுவதால் அந்த இயக்கத்தை அழித்து விட முடியாது. ஏனெனில் கொள்ளைக் கூட்டத்திற்கு ஒரு கொள்கை கிடையாது. ஆனால் ஓர் விடுதலை இயக்கத்திற்கு உறுதியான கொள்கை இருக்கின்றது. அதுதான் எமது ஆதாரம், எமது மூச்சு, எமது அடிப்படை.



படிப்பகம்

www.padippakam.com

## எமது கொள்கைகளும், நோக்கங்களும்

தோழர்களே, அத்தனை சக்திவாய்ந்த ஒரு ஆதார சுருதியாக எமது கொள்கை உள்ளதென்றால், அதற்குக் காரணம் அது மானுட வர்க்கத்தின் விடுதலையுடன் பின்னிப் பிணைந்ததாய் அமைந்திருப்பதுதான். இதுவரை கால மானுட வர்க்கத்தின் போராட்டத்தின் தொடர்ச்சியாக அது அமைந்திருப்பதுதான். ஒரு நாட்டில் ஒரு மக்கள் தொகையின் பிரத்தியேகமான சில பிரச்சினைகளில் இருந்து எழுந்த போராட்டத்தை சர்வ வியாபகமான மானுட வர்க்கத்தின் விடுதலையுடன் இணைத்துச் செல்லக்கூடிய ஓர் ஆழமான பார்வை எமக்கிருந்தது. அதேவேளை எமது போராட்டத்தின் பிரத்தியேகத் தன்மைகளை இனங்கண்டு, அதற்கென ஓர் தனித்துவமான வடிவத்தையும் கொடுக்க எம்மால் முடிந்தது. அது மாத்திரமல்ல, ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்ப, சர்வதேச நிலைமைகளுக்கேற்ப எமது போராட்ட வடிவங்களை மாற்றியமைத்துச் செல்லக்கூடிய மதி நுட்பத்தை இந்தப் பார்வை எமக்களித்திருந்தது. இந்தப் பார்வைதான் தேசிய இனப்பிரச்சனையாக உருவெடுத்த எமது போராட்டத்துள் சமூக பொருளாதார விடுதலைக்கான அடித்தளங்களை இட வழிகாட்டியது. சமூக, பொருளாதார விடுதலை என்ற கருத்து வறட்டுச் சூத்திரமாகி, நடைமுறையில் பாரதூரமான ஒன்றாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில் இனப்பிரச்சனையிலிருந்து அந்நியப்பட்டு ஒதுங்கிப் போய் விடக்கூடாது என்பது ஒரு பக்கத்திலும், இனவிடுதலைப் போராட்டம் என்ற போக்கு ஒரு பக்கமாக இழுபட்டுச் சென்று இனவெறியாகவும், வெறும் பழிவாங்கல் நடவடிக்கைகளாகவும், அவலட்சணமாகி விடக்கூடாது என்பது மறுபக்கத்திலும் எம்மால் வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனடிப்படையில் நாம் வகுத்திருந்த பாதைதான் எம்மை இவ்விரு வகையான எல்லைகளுக்கும் இட்டுச் செல்லாமல் சரியான நிலைப்பாட்டில் வைத்திருந்தது.

தோழர்களே, இன்று நாம் எமது இரண்டாவது காங்கிரசை நடாத்துகின்ற வேளையிலே, நாம் கொண்டிருக்கின்ற உறுதியினையிட்டுப்பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்த வேளையிலே, எமக்கு முன்னால் இருக்கக் கூடிய பணிகளை மிகுந்த சிரத்தையுடன் இங்கு ஆராய வேண்டியவர்களாகவும்



படிப்பகம்

www.padippakam.com

இருக்கின்றோம். இந்தக் கடமையை இதுவரை கால அனுபவத்தினதும், அறிவினதும் துணையுடன், ஒரு கூட்டு உழைப்பின் மூலம் தோழர்களாகிய நீங்கள் யாவருமாக இனிதே நிறைவேற்றி இக் காங்கிரசை வெற்றிகரமாக முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. எமது இக் காங்கிரசின் வெற்றியில் எமது ஸ்தாபனத்தின் எதிர்கால வெற்றிகளும் எமது மக்களின் விடிவுக்கான எதிர்பார்ப்புகளும் அடங்கியிருக்கின்றன என்ற பொறுப்புணர்வுடனேயே எமது தோழர்கள் அனைவரும் சிந்திப்பார்கள் என்ற அசையாத நம்பிக்கையுடன் இந்தக் காங்கிரஸ் இன்று ஆரம்பமாகிறது. இதே வேளையில் நாம் கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க வேண்டியது மிக அத்தியாவசியமான ஒன்று. நாம் கடந்து வந்த பாதையில், தோழர் நாபா கடந்த காங்கிரசில் கூறியது போன்று, எத்தனை ஏச்சுக்கள், பேச்சுக்கள், எத்தனை கேலிகள், கிண்டல்கள், ஏளனங்கள், இவை எல்லாவற்றுக்கு மேலாய் எத்தனை இழப்புக்கள்? இவற்றுக்கு மத்தியில் எமது சாதனைகள்..... எமது மக்களுக்காக நாம் படைத்த சாதனைகள். ஈ.பி.ஆர்.எல். எப் என்னவற்றை எல்லாம் சாதித்தது என்பதை நாம் இன்றும் நெஞ்சு நிமிர்த்தி சொல்ல முடியும். அவற்றை நான் பின்னால் சொல்கிறேன். ஆனால் அச்சாதனைகளை உருவாக்கும் பணியில் தமது உயிர்களைத் தியாகம் செய்த எம் ஆயிரக் கணக்கான தோழர்களை காண்கிறேன். அவர்கள் ஒவ்வொருவருடைய தியாகங்களும் மிகவும் மகத்தானவை. இவ்வேளையில் ஒவ்வொருவராக அனைவரையும், அவர்களது அனைத்துப் பங்களிப்புக்களையும் எடுத்துக் காட்டி விபரிப்பது சாத்தியமில்லை என்ற போதிலும், அவர்கள் யாவருக்கும் பொதுவாக பல்வேறுபட்ட பிராந்தியங்களிலும், எமது ஸ்தாபனத்தின் தூண்களாக இருந்து தியாக தீபங்களாக மாறிய ஒரு சிலரையாவது நாம் நினைத்துப் பார்க்க வேண்டியது அவசியமென நான் கருதுகின்றேன். ஏனெனில் அவர்களது வாழ்க்கை, அவர்களது போராட்ட அனுபவங்கள் யாவுமே எமக்கு படிப்பினைகள், எம்மை முன்னோக்கித் தள்ளும் உந்து சக்திகள். அந்த மகத்தான தோழர்கள் எமது மக்களின் நலன்களுக்காக, அவர்களது விடிவுக்காக, அவர்களது ஜனநாயக உரிமைகளுக்காக தம்மையே தியாகம் செய்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

## தோழர் நாபா வழியில

இவை யாவற்றுக்கும் முன்னோடியாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஸ்தாபகர்களில் ஒருவரும், எமது செயலாளர் நாயகமும், எமது மக்களின் ஒப்பற்ற தலைவரும், உன்னதமான இலட்சியவாதியாகவும் இருந்து எமக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கி, எமது விடுதலைக்காக தனது உயிரை அர்ப்பணித்த, எம் அன்புக்கும் பெருமதிப்பிற்குமுரிய தோழர் **பத்ம நாபாவை** நினைவு கூர்ந்து அவரது பங்களிப்புக்களை குறிப்பிட்டுக் கூறவேண்டியது அதி முக்கியமான ஒரு விடயமாக நான் கருதுகிறேன். தோழர் **நாபாவை** நான் நினைவு கூரும்பொழுது, மானுட வர்க்கத்தின் போராட்டத்தில் தலை சிறந்த தலைவர்களின் வரிசையில் தோழர் **நாபாவின்** முகத்தை நான் காண்கிறேன். இத்தகைய ஒரு மகத்துவமிக்க மனிதனுடன் சேர்ந்து எம்மக்களுக்காக, அவர்களின் விடுதலைக்காக உழைக்க கிடைத்ததென்பது, உண்மையிலேயே எனது பாக்கியம் என்றே நான் கருதுகின்றேன். அவருடைய பங்களிப்புக்களை எனது இந்த சிறிய உரைக்குள், முழுமையான அளவில் சித்தரிப்பதென்பது, முடியாத காரியம். அதனால் சுருக்கமாக குறிப்பிட்டுக் கொண்டு அப்பால் போகலாம் என நினைக்கின்றேன்.

தோழர் **நாபாவின்** பங்களிப்புக்கள் ஒருவகைப்பட்டவை அல்ல. ஆதலால் அவை பல்வேறு கோணங்களில் இருந்தும், பார்க்கப்பட வேண்டியவை. சமூக விடுதலையில் அவரது பங்களிப்பு, தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவரது பங்களிப்பு, சிங்கள மக்களின் விடுதலைக்கு அவரது பங்களிப்பு, சர்வதேச நாடுகளின் முற்போக்கு போராட்டங்களுக்கு அவரின் ஆதரவும், ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தில் அவரது ஈடுபாடும் என்று நாம் வகைப்படுத்தி அவற்றை ஆராய வேண்டும். நான் முன்பு குறிப்பிட்டது போல இப்படியான விரிவான ஆராய்வை இங்கு எனது உரையில் உள்ளடக்க முடியாது என்பதால், நான் இவற்றில் சில முக்கியமான விடயங்களை மட்டும் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.



படிப்பகம்

www.padippakam.com

சமூக பொருளாதார விடுதலைக்கான ஒரு வழியாகவே ஈழ விடுதலையை அவர் கருதினாரேயன்றி வெறும் ஈழம் என்ற நாட்டை நிறுவுவதற்காகவல்ல. இலங்கையில் இன முரண்பாடு கூர்மையடைந்துள்ள நிலையில் இந்த இன முரண்பாட்டிற்கான தீர்வினூடாகத்தான் வர்க்க முரண்பாடுகளை தீர்க்க முடியும் என்று வலியுறுத்தி அதனடிப்படையிலே ஈழ விடுதலை தான் சிங்கள மக்களின் விடுதலைக்கும் வழிவகுக்கும் என்று கூறினார். தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வொன்றை சிந்திக்கும்போது சிங்கள மக்களின் விடுதலை பற்றியும் அதே சமயத்தில் அவர் சிந்தித்தார். வெறுமனே வாய் பேச்சுடன் மட்டும் அவர் நின்று விடவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் முற்போக்கு ஸ்தாபனங்களை தோற்றுவிப்பதிலும் ஊக்குவிப்பதிலும் தானே நேரடியாக நின்று பங்கு ஆற்றினார். ஈழ விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக அமைய வேண்டும், அதற்காக மக்கள் அணி திரட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். மக்கள் அமைப்புக்கள் கட்டுவதையே கட்சிப் பணிகளில் முதன்மைப் படுத்தினார். பாட்டாளி வர்க்கமே ஈழ விடுதலைப் போராட்டத் தின் முன்னணிப் படையாக இருக்க முடியும் என்பதை வலியுறுத்தி எப்பொழுதும் தன்னுடைய அடிப்படை வேலைத் திட்டங்களை அவர்கள் மத்தியில் வைத்துக் கொண்டார். இவ்வகையில் மலையக மக்கள் மத்தியிலான வேலைத் திட்டங்களில் பெரிதும் அக்கறை கொண்டவராக இருந்தார். ஆரம்பகாலத் தலை மறைவு வாழ்க்கையின்போது தானே நேரடியாக மலையகத்தில் நின்று செயலாற்றினார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் விடுதலை இயக்கங் களிடையே ஐக்கியத்தை உருவாக்க இடையறாது முயற்சித்து வந்தார். அவருடைய கடுமையான முயற்சியின் பயனாகவே 1985இல் ஈழத்தேசிய விடுதலை முன்னணி என்ற ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது. இதே வேளை இவ் ஐக்கிய முன்னணிக்குள் சேர்ந்து கொள்ளாத இயக்கங்களுடனும் வேறு அடிப்படையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்காக முயற்சித்து வந்தார். இப்படியான முயற்சியில் கட்சி எத்தனையோ விட்டுக் கொடுப்புக்களை செய்ய வேண்டி ஏற்பட்டு, அதனால் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்ட போதும் கூட, அவர் கட்சியின் நலன்களை மக்களின் நலன்களுக்கு கீழ்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். கட்சியைப் பொறுத்த வரையில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் போது அரசியல்தான் ஆயுதத்தை வழிநடத்த வேண்டுமேயன்றி மாறாக ஆயுதத்தால் அரசியல் வழிநடத்தப் படக்கூடாது என்பதில் விழிப்பாக இருந்தார். உட்கட்சி ஜனநாயகத்துக்கு அதிகளவு முக்கியம் கொடுத்தார். ஈழ விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பலதும் தமது தலைமைத்துவத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக நடாத்திய உட்கட்சிப் படுகொலைகளும், பொருளாதாரத்தை ஈட்டுவதற்காக நடாத்திய போதைப்பொருள் கடத்தல்களும் எமது ஸ்தாபனத்தை அண்டி விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார். அதே போல் தமிழ் இனவாத உணர்வுகளைத் தூண்டி தமிழ் மக்களிடையே இலங்கையிலும், இந்தியாவிலும், ஏனைய நாடுகளிலும் செல்வாக்கையும், பிரபல்யத்தையும், பொருளாதார உதவிகளையும் ஈட்டிக் கொள்ளும் குறுகிய நோக்குடன் விடுதலை இயக்கங்கள் பலவற்றாலும் மேற்கொள்ளப்பட்ட அப்பாவிச் சிங்கள மக்கள் மீதான படுகொலைகளை வன்மையாகக் கண்டித்தார். அடிப்படை நியாயங்களையே மறுதலித்து கீழ்த்தரமான முறைகளால் முன்னேற முனைந்திருந்த பல விடுதலை இயக்கங்களின் மத்தியில், அவர் எம்மை நேர் வழியில் கடினமான இலட்சியப் பாதைவழியாக தனது உறுதி குலையாத தலைமைத்துவத்தின் கீழ் வழி நடத்தி வந்தார்.

இதே வேளை அவர் சரியானதும், தெளிவானதுமான சர்வ தேசப் பார்வை கொண்டவராகவும் விளங்கினார். சர்வ தேச முற்போக்குப் போராட்டங்களுக்கும், தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் அவர் ஆதரவைத் தெரிவித்து வந்ததுடன், குறிப்பாக பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் தனது நேரடியான ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கு எதிரான சக்தியாக இந்தியாவை இனங்கண்டு, அதனுடன் எமது நட்புறவை வளர்ப்பதில் மிகவும் அக்கறை காட்டினார். ஆனால் ஈழ விடுதலை என்ற வட்டத்துக்குள் மட்டும் சிந்தித்தும்,



படிப்பகம்

www.padippakam.com

செயற்பட்டும் வந்த விடுதலை இயக்கங்கள் பலவற்றிற்கு, இந்தியாவுடனான உறவு தொடர்பாக பல குழப்பகரமான கருத்துக்கள் இருந்தன. எந்த ஒரு இயக்கமும் இந்தியா தொடர்பான நிரந்தரமான ஓர் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் சந்தர்ப்பத்திற்கு, ஏற்றாற் போல் ஆதரித்தும் எதிர்த்தும் வந்தன. ஆனால் எமது கட்சி இவ் விடயத்தில் மிகவும் தெளிவான ஓர் நிலைப்பாட்டை ஆரம்பம் முதலே கொண்டிருந்தது. எந்த விலை கொடுத்தும் இந்தியாவுடனான நட்பை நாம் பாதுகாக்க வேண்டும் என்பதில் கவனமாயிருந்தோம். அதற்கு பல காரணங்களும் இருந்தன.

முதலாவதாக இந்தியா எமது அண்டை நாடு. அங்கு 50 மில்லியனுக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வாழ்கின்றார்கள். எமது போராட்டத்துக்கு, அவர்களுடைய பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இரண்டாவதாக, இந்தியா அணிசேரா நாடுகளின் முதன்மைப் பாத்திரத்தை வகிக்கின்றது. ஆகவே இதனுடன் நட்பாய் இருப்பதன் மூலம், எமது பிரச்சனைகளை சர்வதேச மட்டத்திற்கு எடுத்துச் செல்வதுடன், அவர்களது ஆதரவைப் பெற்றுக்கொள்வதும் இலகுவாக இருக்கும். மூன்றாவதாக இந்தியா தன்னளவில் ஓர் முதலாளித்துவ நாடாக இருந்த போதிலும் கூட அது ஏகாதிபத்திய, நிறவெறிகளுக்கு எதிரான நாடாகவும் ஆரம்ப காலம் தொடக்கம் இருந்து வருகின்றது. அது மாத்திரமல்லாமல், சர்வ தேச விடுதலை ஸ்தாபனங்களுக்கு அது தன்னாலியன்ற உதவிகளையும் செய்து வருகின்றது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஓர் வலிமை மிக்க, முன்னேறி வரும் நாடாகவும் அது இருக்கின்றது. மேற்கண்ட நியாயங்களின் அடிப்படையில் தான் நாம் இந்தியா தொடர்பான கொள்கைளை வகுத்திருந் தோம். இந்தியா ஈழத்தை அங்கீகரிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் சிறீலங்கா அரசாங்கத்தின் இனவெறிக் குணாம்ச மானது, இறுதியில் ஈழத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டிய சூழ்நிலையை தோற்றுவித்திருக்கும். எமது ஒவ்வொரு நடவடிக்கையும், அதனை நோக்கியதாகவே இருந்தது. சிறீலங்கா அரசு ஒப்பந்தங்களை மதிப்பதில்லை, அவற்றை நடைமுறைப்படுத்துவதில்லை, இவர்களுடன் இணைந்து



படிப்பகம்

www.padippakam.com

வாழ்வது எவ்வளவு கடினமானது என்பதை நாம் நேரடியாகவே இந்திய அரசுக்கு நிரூபித்து வந்தோம். ஆனால் புலிகளின் மிகக் குறுகிய தான்தோன்றித்தனமான நடவடிக்கையால் இந்தியாவை எமக்கு எதிரியாக்கிக் கொண்டோம். இவற்றை இங்கு நான் ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்றால் ஈ.பி.ஆர்.எல்.எப். என்பது இந்திய எடுபிடிகள் போலவும், நாம் ஏதோ தேசத் துரோகிகள் போலவும், சிலர் எம்மீது முத்திரை குத்த முயற்சிக்கின்றார்கள். புலிகளும், தமிழ் இன வெறியர்களும், இந்தியாவிலும், இலங்கையிலும் இருக்கக்கூடிய மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் இடது தீவிர வாதிகளும் இவ் வேலைகளைக் கச்சிதமாகச் செய்து வருகின்றார்கள். இவர்களுக்கு நாம் கூறிக் கொள்ள விரும்புவதெல்லாம், நாம் ஓர் காத்திரமான அடிப்படையிலே இந்திய உறவை கட்டி வளர்த்தோம். புலிகள் அதை குழப்ப முயற்சிக்கலாம், ஆனால் எமது மக்களின் நலன்களின் அடிப் படையில், இந்தியாவுக்கும் எமக்குமான உறவை பலப்படுத்த வேண்டியதே இன்றைய உடனடிக் கடமையாகும். இந்த விடயத்தில் எம்மைப் பார்த்து ஏளனம் செய்வோர் தான் துரோகி களே தவிர நாமல்ல. இவர்களைப் பார்த்துத்தான் நாம் வெட்கப் பட வேண்டும். இவற்றை இங்கு சுட்டிக் காட்டுவது மிகவும் முக்கியமென நான் கருதுகின்றேன். தோழர் **நாபாவின்** தூர நோக்கும், விரிந்த பார்வையும் தான் இந்தியாவுடனான எமது கொள்கையின் அடிப்படையாகும்.

அவரது பரந்த மனப்பான்மையும், விட்டுக் கொடுக்கும் தன்மையும் நட்புச் சக்திகளை அரவணைத்துச் செல்லும் பாங்கையும், நாம் பல்வேறு இடங்களில் காண முடிந்தாலும், எம்முடைய அரசாங்கம் மாகாண சபையில் பதவியேற்றபோது, அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதில் அவருடைய வழிகாட்டல் அதை வெளிப்படையாக நிரூபித்தது. மாகாண அரசில் முதலமைச்சர் தவிர்த்த ஏனைய நான்கு அமைச்சர்களுக்கு உரிய இடங்களில் ஒரு அமைச்சருக்குரிய இடத்தை மட்டுமே எமக்கு எடுத்துக் கொண்டு, ஏனைய மூன்று அமைச்சர் பதவிகளையும் எமது நட்பு சக்திகளுக்கு வழங்க முன்வந்தார். ஒரு அமைச்சர் பதவியை எம்முடன் கூட்டரசை அமைக்க முன்வந்த



படிப்பகம்

www.padippakam.com

ஈ.என்.டி.எல்.எப். இற்கும், இன்னொன்றை முஸ்லீம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துமுகமாக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த முஸ்லீம் ஒருவருக்கும், இன்னொன்றை சிங்கள மக்களை பிரநிதித்துவப்படுத்தும் முகமாக சிங்களவர் ஒருவருக்கும் கொடுக்கப்பட்டது. மேலும் பாராளுமன்றத் தேர்தலிலும் கூட எமது ஒன்றிணைந்த சக்தியை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரின் கீழ் இதர தமிழ் கட்சிகளுடன் இணைந்து போட்டி இடுவதற்கு முன் வந்தார். அத்துடன் எமது வேட்பாளர் பட்டியலில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஒரு இடத்தைக் கொடுத்திருந்தார். இந்த வகையில் அவர் எப்பொழுதுமே மக்களின் பொது நலன்களைப் பற்றியே சிந்தித்து வந்தார்.

இப்படிப்பட்ட சிந்தனையும், செயற்பாடும், பலரும் அறியக்கூடியதாயிருந்தாலும், தனிப்பட்ட ரீதியில் அவருடைய பண்புகள் எப்படி இருந்தன என்பதை என்போன்ற அவருடன் நெருக்கமாகப் பழகிய ஒருசிலரே கூடுதலாக அறிவர். அவருடைய இத்தகைய தனிப்பட்ட நற்பண்புகளே அவரது அசாத்தியத் தகைமைகளுக்கு அடித்தளமாக விளங்கின. அவற்றையிட்டும் சில வார்த்தைகளை நான் கூறியாக வேண்டும். அவர் தன்னைப் பற்றியோ தனது குடும்பத்தைப் பற்றியோ என்றுமே கவலைப்பட்டதில்லை. உடல் நலத்தைப்பற்றி மட்டுமல்ல, தனது பாதுகாப்புப் பற்றியும் பொருட்படுத்திக் கொண்டதில்லை. அவரது மரணம் வரையும் அவர் அப்படியேதான் வாழ்ந்தார். அதே சமயம் அவர் ஒவ்வொரு தோழரின் நலனிலும் மட்டுமல்ல, தானறிந்த ஒவ்வொரு பொது மகனின் நலனிலும் அக்கறையாக இருந்தார். தனது மெய்க்காவலன் தூங்கி விட்டால் கூட அவனது தலைக்கு தலையணை எடுத்து வைத்து தாக்கத்திற்குவசதி செய்து கொடுக்கின்ற அன்பு கனிந்த இதயம் அவருடையது. அமைதியான சுபாவம், அதிகமாகப் பேசமாட்டார். ஆனால் அவர் பேசுகின்ற சொற்ப வார்த்தைகள் மிகவும் பொருள் படர்ந்ததாக இருக்கும். அதைப் பேசுகின்ற பாணி மிகவும் கனிவானதாக இருக்கும். பணிப்புரைகளைக் கூட அவர் ஒரு போதும், அதிகாரத் தோரணையில் கூறியதில்லை. இருந்தும் வசீகரம் மிக்க அவரது வார்த்தைகள்



படிப்பகம்

www.padippakam.com

எவராலும் மறுதலிக்க முடியாததாய் இருக்கும். அவர் ஓய்வெடுத்துக் கொள்வதை காண்பதே அபூர்வமாய் இருக்கும். மிகவும் கடினமான உழைப்பாளியாக இருந்தார். இரவு நெடுநேரத் துக்கு பின் உறங்கச் செல்லும் அவர் அதிகாலையிலேயே ஏதாவது வேலை நிமித்தம் புறப்பட்டுச் சென்று விடுவார். அவர் பிறர் எவரையும் எதிர் பார்த்து நின்று கொண்டிராமல் தானே வேலைகளைச் செய்து கொண்டு போவார். அவரது உழைப்பை களைப்பு தடுத்ததில்லை, தூரம் தடுத்ததில்லை, நேரம் தடுத்ததில்லை, பணமும் தடுத்ததில்லை, பணமின்மையும் தடுத்ததில்லை. பசியோ, வருத்தமோ எதுவுமே அவரது செயற்பாட்டிற்கு தடை போட முடியவில்லை. அவர் இழப்புக்களைக் கண்டு சோர்வடையவில்லை, அபாயங்களைக் கண்டு அஞ்சவுமில்லை. எமக்கு முன்னால் இருந்த பாரிய கடமைகளையும் சவால்களையும் கண்டு பிரமித்துப் போய் நின்றதில்லை. அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து போனதில்லை. அவற்றை எல்லாம் அவர் துச்சமாக மதித்தார், எவ்வளவு பாரிய பிரச்சனைகளாய் இருந்த போதும் கூட (No Problem) பிரச்சனையில்லை என்று சாதாரணமாகக் கூறிக் கொண்டு அதனை எதிர் கொள்வார். இன்று நாம் திரும்பிப் பார்க்கையில் எப்படிச் சாத்தியமாயிற்று என்று வியப்படையக் கூடிய மிகமிக நெருக்கடி வாய்ந்த, நிதி நிலமை படுமோசமாக இருந்த கால கட்டங்களிலும் கூட தாக்குப் பிடித்து அதிசயிக்கக் கூடிய வகையில் நாம் செயற்பட்டிருக்கிறோம் என்றால், அதற்கு காரணம் இத்தகைய ஓர் தலைமைத்துவ தோழர் எமக்கு வாய்த்திருந்ததேயாகும்.

"கடமையைச் செய் பலனை எதிர் பாராதே" என்று பகவத்கீதையில் கூறப்பட்டிருப்பதுபோல, அவர் எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல் தனது கடமையை, உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் விடிவுக்காவும், உழைக்கும் வர்க்கத்தின் விடுதலைக்காகவும், பொதுப்படையான மனித தர்மத்திற்காகவும் இறுதி வரை சேவை செய்து அக்கடமையிலேயே மரணித்தார். புரட்சிகர சிந்தனைக்கு வித்திட்டு உழைக்கும் மக்களுக்கான விடிவெள்ளியாகத் தோன்றியவர் கார்ல் மாக்ஸ். அவரோ தனது சிந்தனையின்



படிப்பகம்

www.padippakam.com

வெற்றிகளைக் கண்கொண்டு காணும் வரை உயிரோடிருந்த தில்லை. உழைக்கும் மக்களின் சுபீட்சத்திற்கான தத்துவத்தைப் படைத்த அவர் வறுமையிலே வாழ்ந்து வறுமையிலே இறந்தார். தனது வறுமைக்காக தனது சித்தாந்தத்தை அவர் எப்பொழுதும் சமரசம் செய்து கொண்டதில்லை. தோழர் **நாபாவும்** கூட பதவிகள் தேடி வந்த பொழுதும் கூட அதனை ஏற்காமல், ஏனையோர் பொறுப்பில் விட்டுவிட்டு இன்னும் ஈட்டப்படாத மக்களின் விடுதலையின் பால் தனது உழைப்பை செலுத்துவதற்குச் சென்றார். இறுதி வரை தான் உயிரோடு வாழ வேண்டும் என்று கூட யோசித்திருக்க மாட்டார். தான் இல்லாது போனால் வரலாறு நின்று விடாது என்ற நம்பிக்கை அவருக்கிருந்தது. அவர் தான் கொண்ட கொள்கை சரியென் பதில் இறுதிவரை உறுதியாக இருந்தார். இலங்கை அரசாங்கம், இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை அடுத்து அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கியபோது இவர் மீது தொடுத்திருந்த வழக்கில் மன்னிப்பு வழங்கத் தயார் என்று அறிவித்த போதும், தான் செய்த போராட்டத்தை குற்றம் என்று ஒப்புக் கொள்ள முடியாது; என்று மறுத்து இம் மன்னிப்பை நிராகரித்தவர். இயல்பிலேயே மிக மென்மையான இவர் கொள்கைப் பிடிப்பில் சமரசத்துக்கு இடமற்ற கடும் உறுதி கொண்டவராக விளங்கினார்.

தோழர்களே, தோழர் **நாபா** இன்று எம்முடன் இல்லாவிட்டாலும் அவரது சிந்தனை நிலைத்து நிற்கிறது. நம்மால் அவருக்கு செய்யக்கூடிய நன்றிக்கடன் என்ன வென்றால் அவரது சிந்தனைகட்கு செயல் வடிவம் கொடுப் பதே. இறுதி ஈ.பி.ஆர்.எல்.எப். தோழன் இருக்கும் வரை தோழர் நாபாவின் சிந்தனைகள் செயற்பட்டுக் கொண்டுதான் இருக்கும் என்ற உறுதியை நாம் அவருக்கு வழங்குவோம்.

தோழர் **நாபா** பற்றி நான் கூறியதைவிட எவ்வளவோ பேர் இன்னும் நிறைய விடயங்கள் கூறியும், எழுதியும் உள்ளார்கள். தோழர் நாபாவின் நினைவு மலரில் முன்னாள் இந்தியப் பிரதமர் முதற்கொண்டு பல்வேறுபட்ட தலைவர்களும் கல்விமான்களும், தோழர்களும் பல விடயங்களை சுட்டிக்காட்டி எழுதியுள்ளனர். இன்னும் இங்கு உரையாற்றும் தோழர்களும் அவருடனான



படிப்பகம்

www.padippakam.com

தங்கள் அனுபவங்களைக் கூறுவார்கள். எனவே இதனை இத்துடன் நிறுத்தி, வீரமரணமெய்திய வேறுசில தோழர்களின் நினைவுகளையும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## தியாகிகளை நினைவுகூர்வோம்

எம் எல்லோராலும் மிகவும் பாசத்துடன் அழைக்கப்பட்ட தோழர் **ஐயா**; எமது முதலாவது காங்கிரசின் போது சிறீலங்கா சிறையில் இருந்த அவர் மத்திய கமிட்டி உறுப்பினராக தோழர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். முழுத் தோழர்களின் அன்புக்கு பாத்திரமான இவர், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உருவாவதற்கு முன்பிருந்தே ஈழவிடுதலைக்காக தன்னை அர்ப்பணித்து உழைத்து வந்தவர். விடுதலைக்கான சரியான ஸ்தாபனம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். ஐ ஸ்தாபித்த ஸ்தாபகர்களில் ஒருவர். தோழர் **ஐயாவைப்** பற்றி மிகச் சுருக்கமாக கூறுவதெனில் அவர் ஓர் உழைக்கும் மக்களின் பிரதிநிதி, இவரது ஆரம்பகால வேலைகள் வன்னிப்பிரதேசத்து, வறிய மக்களை, குறிப்பாக இடம் பெயர்ந்து வந்து குடியேறிய மலையக மக்களை அடித்தளமாகக் கொண்டிருந்தது. இவர் மக்களிடையே வெறும் அரசியல் வேலைகள் மட்டுமின்றி, அவர்களது வாழ்க்கைத் தரத்தை சீரமைக்க வேண்டி அவர்கள் மத்தியில் பண்ணைகள் போன்ற பொருளாதார வேலைத் திட்டங்களிலும் முன்னின்று உடல்ரீதியாக பொது நோக்கில் உழைத்தவர். இவர் எமது தோழர்களுக்கு மட்டுமல்ல, தனது பிரதேசத்தில் வாழ்ந்த மக்களுக்கே வழிகாட்டியாக, நண்பனாக, அந்நியோன்யமானவனாகத் திகழ்ந்து அவர்களால் பெரிதும் நேசிக்கப்பட்டவர். அவரை நம்பி மனைவி பிள்ளைகள் என்று ஓர் குடும்பமே இருந்த போதும் கூட தன்னை முழுமையாகவே விடுதலைக்கு அர்ப்பணித்துக் கொண்டவர். எத்தனையோ இன்னல்களை எதிர் நோக்கிய போதும் கூட சாந்தமான புன்சிரிப்புடன் அவற்றைத் தாங்கிக் கொண்டவர். பல்வேறுபட்ட அபாயங்களையும் தாண்டி வந்த போதும் இறுதியில் எமது கடும் உழைப்பால் ஸ்தாபித்த மாகாண அரசு பரிணமிக்கும் நிலையில் அதைப் பார்க்காமலே மரணித்து விட்டார். இத்தகைய துர்ப்பாக்கியத்தை ஏற்படுத்தியவர்கள், நாம் எதிர்த்துப்



படிப்பகம்

www.padippakam.com

போராடிய சிறீலங்கா இராணுவமோ அல்லது இடையில் அதிகாரமோகத்தால் எம்மையும் எம்போன்ற ஏனைய விடுதலை இயக்கங்களதும் எதிரியாக தன்னைத்தானே மாற்றிக் கொண்ட பாசிச புலிகளாகவோ இல்லாமல், தமிழ் பேசும் மக்களின் விடுதலை என்ற பொது நோக்கில் எம்முடன் புரிந்துணர்வுடன் செயற்படுபவராகக் காட்டிக்கொண்ட புளொட் எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரே இக் கோரக் கொலையை செய்தமையே எம்மை வேதனைப்பட வைத்த விடயமாகும். கொள்கையிலோ, நடைமுறையிலோ வேறுபடக் கூடிய பிரதானமான காரணங்களின் அடிப்படையிலும் இல்லாமல் வெறுமனே, இத் தோழரின் ஆழுமை மிக்க உழைப்பால் எமக்கு வன்னிப்பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மக்கள் ஆதரவு குறித்த, கீழ்த்தரமான பொறாமை உணர்வால் மட்டும் இந் நயவஞ்சகக் கொலையை அவர்கள் செய்தார்கள் என்பதுதான் எமது விடுதலை போராட்ட வரலாற்றில் வெட்கக்கேடான விடயமாகும். மக்களின் விடுதலைக்காக ஜனித்த எத்தனையோ ஆயிரம் பேரில் ஒருவராகக் கணிக்கக்கூடிய இத்தகைய தலைவர்களை அழிப்பதன் மூலம் விடுதலையை கருவறுப்பது ஒருபுறமிருக்க, அவர்கள் தமது சொந்த இலாபத்துக்கேனும் எதனைத் தான் பெரியதாக ஈட்டிக்கொண்டார்கள் என்பதும் கேள்வியே. இத் தோழரின் உதிரம் பாய்ந்த மண் என்றும் உழைக்கும் மக்களின் விடுதலைப் போராளிகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும்.

தோழர் **ஐயா**வைப் போலவே என்றும் எம்மால் மறக்கப்பட முடியாதவர் தோழர் **குமார்**. முதலாவது காங்கிரசில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட மத்திய கமிட்டி உறுப்பினர். ஆரம்பகால உறுப்பினரான தோழர் குமாரின் உழைப்பு கிழக்கு பிராந்தியத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கு நல்லதோர் தளத்தை ஏற்படுத்தித் தந்தது. கிழக்குப் பிராந்தியத்தில் தோழர்களை அரசியல் மயப்படுத்துவதில் மிகுந்த ஈடுபாடு காட்டியவர். மிகக் குறைந்த வசதிகளோடு எதிரிப்படைகளின் கடுமையான நடவடிக்கைகளுக்கு மத்தியில் எமது ஸ்தாபனத்தை உறுதியாகவும் பரந்த அளவிலும் கட்டி எழுப்பினார். சாந்தமான குணமுடைய தோழர் **குமார்** மிகவும் கடுமையான உழைப்பாளி.



படிப்பகம்

www.padippakam.com

ஸ்தாபனத்தோழர்களுக்கு அரசியல் தலைமை கொடுத்த அவர், கிழக்கில் எமது முன்னணி அமைப்புக்களையும் கட்டுவதில் முன்னின்று உழைத்தார். சுய விமர்சன அடிப்படையில் தோழர்களிடையே புரிந்துணர்வையும் கூட்டு உழைப்பையும் வலுப்படுத்தி வளர்த்தார். குறிப்பாக முன்னணி அமைப்பிற்கும், இராணுவ அமைப்பிற்குமிடையே புரிந்துணர்வுடன் கூடிய கூட்டுச் செயற்பாட்டை தனது தலைமையின் கீழ் நெறிப்படுத்தி வந்தார். அபாயகரமான சூழ்நிலையின் மத்தியிலும் ஸ்தாபனத்தை வளர்ப்பதற்காக முன்னின்று உழைத்த இவர் இப் பணியிலேயே எதிரிப் படைகளுடன் மோதி வீர மரணமடைந்தார்.

இவர்கள் வரிசையில் எமது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு உரமிட்ட இன்னொரு தோழர் சிவா. மட்டக்களப்பு பிராந்தியத்தின் இராணுவத் தளபதியான இவரின் உழைப்பு, எமது ஸ்தாபனத்துக்கு அஸ்திவாரமாக அப்பிராந்தியத்தில் அமைந்தது. மிக இக்கட்டான காலகட்டத்தில் தலமைப் பொறுப்பேற்ற இவர் தனது தோழர்களை காக்கும் பணியில் தானே முன்னின்று போரிட்டு வீரமரணமடைந்தார்.

திருகோணமலையின் சிம்மமாகத் திகழ்ந்த தோழர் சின்னவனின் உழைப்பை நான் குறிப்பிட்டாக வேண்டும். காரைநகர் முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த அவர் எமது பாசறைகளில் தோழர்களைப் பயிற்றுவிப்பதிலும், ஆயுத உற்பத்திச் சாலையிலும் முக்கிய பங்காற்றினார். இவருடன் சேர்ந்து களத்தில் வீரமரணமடைந்த தோழர்கள் வேலு, கணேஸ், ரஞ்சன், சோபா ஆகியோரையும் எண்ணிப் பார்க்கிறேன்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் களம் புகுந்து வீரமரணமடைந்த பெண் என்ற பெருமையும் தோழர் சோபாவுக்கே உரியது. மேலும் யாழ்பிராந்தியத்தில் இராணுவத் தளபதியாக இருந்து புலிகளால் படுகொலைசெய்யப்பட்ட தோழர் கபூரின் பங்களிப்பு எமது ஸ்தாபன வளர்ச்சியில் இன்றிமையாதது. ஆரம்ப காலத்தில் கொழும்பில் செயலாற்றிய அவர் பின்னர் தொடர்பாளராக செயலாற்றி இறுதியில் யாழ் பிராந்திய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றார். இவருடன்



படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்து புலிகளால் யாழ்நகரில் ஒரே அறையில் படுகொலை செய்யப்பட்ட 57 தோழர்களையும், பொது மக்களையும் நான் நினைவு கூர்கின்றேன். இதில் எமது மலையகப் பிராந்தியப் பொறுப்பாளரான தோழர் அன்பரசன், மற்றும் பெஞ்சமின் ஆகிய மலையகத்தோழர்களை குறிப்பாகச் சொல்லவேண்டும். மலையகத்தில் எமது ஸ்தாபன வேலைகளிற்கு ஆதாரமாக இருந்தவர்கள் இவர்கள். தோழர் பெஞ்சமின் மருத்துவ சேவையில் எமது தோழர்களுக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் ஆற்றிய சேவையை எவரும் மறந்து விட முடியாது.

இதே வேளையில் எமது ஆரம்ப காலங்களில் ஈழ விடுதலைக்காக மரணித்த தோழர்கள் வரிசையில் வெலிக்கடைச் சிறைப் படுகொலைகளில் மரணித்த தோழர்கள் பாஸ்கரன், தேவகுமார் போன்றோரும் யாழ் நகரில் மக்கள் விடுதலைப்படையின் ஆரம்பகர்த்தாக்களுள் ஒருவரான தோழர் குமார், மட்டு நகரில் ஸ்தாபனத்தை கட்டுவதில் காத்திரமான பங்காற்றிய தோழர் பாலா, தோழர் தைரி வன்னிப் பிரதேசத்தில் ஆரம்ப காலத்தில் பணியாற்றிய தோழர் நடேசலிங்கம், மன்னாரில் தோழர்கள் ரட்னம் விமல், விஜி, பாலா வவுனியாவில் ஈசன், கிளிநொச்சிகதிர், முல்லைத்தீவு கொட்வின், சுந்தர், ஜெஸ்லி ஆகியோரையும் நினைத்துப் பார்க்கின்றேன். இதே வேளை மட்டக் களப்பு இராணுவத் தளபதியாக இருந்து எதிரிப் படைகளுடன் போராடி எமது மத்திய கமிட்டித் தோழர் குமாரு டன் வீரமரணமடைந்த தோழர் அருளையும் நான் நினைவு கூர்கின்றேன்.

மாகாண சபை அரசைக் காக்கும் பணியில் உயிர் நீத்த தோழர் ஜோர்ஜ், திருகோணமலையில் விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தி எமது ஸ்தாபன வேலைகளையும், மாகாண சபை வேலைகளையும் முன்னெடுக்க உதவியவர். நிக்கரகுவா – சன்டினிஸ்ராக்களுடன் இரண்டு வருடம் பணியாற்றியவர். புலிகளின் கொலைக்கரங்களுக்குள் அகப்பட்ட தோழர்களில் இவரும் ஒருவர். திருகோணமலையில் தோழர்களதும் மக்களதும் பெரும் அன்பையும் பாராட்டையும் பெற்றவர். மாகாண சபையில் எமது கட்சிக் கொறடாவாகப் பணியாற்றியவர். இதே போல் மாகாண சபையின் பிரதிச் சபாநாயகராக இருந்து நயவஞ்சகத்தனமாக



படிப்பகம்

www.padippakam.com

புளொட் இயக்கத்தினரால் கொலை செய்யப்பட்ட தோழர் கணேஸ் அவருடன் தோழர் சின்ன சிவா, இவர்களையும் நினைத்துப் பார்க்கிறேன்.

இறுதிக் காலகட்டத்தில் மரணித்த எம் தோழர்கள் வரிசையில் எமது செயலாளர் நாயகத்துடன் மரணித்த 13 தோழர்கள், இதில் எமது மத்திய கமிட்டித் தோழரும், வடக்கு கிழக்கு மாகாண சபையில் நிதியமைச்சருமாக இருந்த தோழர் கிருபாவை நினைவுகூர்கின்றேன். அவர் கிழக்கு மாகாணத்தைப் பொறுப்பேற்கும் போது; சக தோழர்கள் பலரையும் இழந்த நிலையில் பெரும்பொறுப்பை தன்மீது சுமந்து கொண்டே பொறுப்பேற்றார். ஆனால் மட்டக்களப்பை உறுதியான தளமாக உருவாக்கிய பின்னரே அவர் கண்மூடினார். மாகாண சபை அரசை நிறுவுவதில் அவர் பணி மகத்தானது. மாகாண சபை அரசை நிறுவுவதில் எதிர்ப்புரட்சிகர நாசகார வேலைகளில் ஈடுபட்ட புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் முனைப்புடன் முன்னின்று செயலாற்றியவர் இவர். இப்படுகொலையின் போது மரித்த எமது மற்றொரு தோழர் சங்கரி. எமது யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான இவர் முன்னர் இங்கிலாந்தில் எமது ஸ்தாபனப் பணிகளை முன்னின்று மேற்கொண்ட தோழர்களில் முக்கியமானவர். மிகுந்த ஊக்கமுடைய இத் தோழரின் பங்களிப்பு, மாகாண சபைக் காலக்கட்டத்திலும், அதன் பின்னரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இப்படுகொலையில் மரணித்த தோழர் மிகிலாரை நாம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அரசியல் உணர்வுடைய இவர் முஸ்லீம் மக்களிடையே எமது ஸ்தாபன வேலைகளை முன்னெடுத்துச் செல்வதில் மிகப் பெரும்பங்காற்றியவர். இத்துடன் தோழர்கள் ரவி, லிங்கன், கோமளராஜா, தர்மன், அன்புமுகுந்தன், ரமணன், புவிநாதன், கவிதா, ஜெசிந்தா ஆகியோர் இப்படுகொலையில் எம்மை விட்டுப் பிரிந்தனர். இவர்களுடன் எமது நெருங்கிய ஆதரவாளர்களாக இருந்து புலிகளால் படுகொலை செய்யப்பட்ட மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாம் தம்பிமுத்துவும், அவர் மனைவி திருமதி கலா தம்பிமுத்துவும் எம்மால் நினைவுகூரப்பட



படிப்பகம்

www.padippakam.com

வேண்டியவர்கள். எமது போராட்டத்தின் பல்வேறுபட்ட கட்டங்களிலும் பல தோழர்கள் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்துள்ளார்கள். அவர்கள் எல்லோரையும் இங்கு பெயர் குறிப்பிட்டுக் கூறுவதென்பது மிகவும் சிரமமானது. ஈழ விடுதலைப் போராட்டம் என்ற வகையில் சிறீலங்கா அரச படைகளுடனான மோதல்களில் மட்டும் இவர்கள் மரணிக்கவில்லை. மிகப் பெரும்பான்மையான தோழர்கள் அதிகார மோகங்கொண்ட பாசிசப் புலிகளினாலேயே படுகொலை செய்யப்பட்டார்கள். சிலர் வேறுசில சக்திகளாலும் கொலை செய்யப்பட்டார்கள். மேற்கண்ட கொலைகளே எமது போராட்டப் பாதை எவ்வளவு கரடு முரடானது என்பதை தெளிவாகக் காட்டும்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தோழர்களின் தியாகத்தை நாம் குறைத்துக் கணிப்பிடமுடியாது. அவர்கள் என்ன கொள்கைகளுக்காக தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தார்களோ, அதை முன்னெடுத்துச் சென்று வெற்றிகரமாக முடிப்பதே நாம் அவர்களுக்கு செய்யும் அஞ்சலியாக இருக்கும். எமது மக்களின் விமோசனத்திற்காக மரணித்த எமது தோழர்கள் பற்றிய புனிதமான நினைவுகளை ஏந்திக்கொண்டு நாம் இவ்விரண்டாவது காங்கிரசில் எமது கடமைகளை வரைவுசெய்வதையிட்டுச் சிந்திப்போம்.

## திரும்பிப் பார்க்கிறோம் – ஆரம்பம் முதல் – இன்று வரை

தோழர்களே, இந்த இரண்டாவது காங்கிரசை ஆரம்பிக்கும் போது, எமது முதலாவது காங்கிரஸ் பற்றிய எண்ணங்களும் கூடவே எழுகின்றன. அந்தக் காங்கிரசை தலைமை தாங்கி எமது கொள்கைத் திட்டங்களையும் வேலைத் திட்டங்களையும் செப்பமாக வரைந்தெடுத்து முதலாவது காங்கிரசை ஒரு வெற்றிகரமான ஆரம்பமாக அடித்தளமிட்ட தோழர்களில் முக்கியமானவரான தோழர் நாபா இன்று எம்முடன் இல்லை. கூடவே முதலாவது காங்கிரசில் பங்கு வகித்த பல தோழர்களுமில்லை. அன்றைய சூழ்நிலையிலிருந்து இன்றைய சூழ்நிலை எவ்வளவோ மாறிவிட்டது. அன்றிலிருந்து இன்று வரை நாம் கடந்து வந்த பாதையை அதிகளவு விபரிக்கா



படிப்பகம்

www.padippakam.com

விட்டாலும், அதை மேலோட்டமாகவேனும் பார்க்க வேண்டுமென விரும்புகிறேன். எமது ஸ்தாபனத்தின் ஆரம்ப கட்டத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சி நிலை அதன் குழந்தைப் பருவத்தில் இருந்தது. அதற்கு முற்பட்ட காலங்களில் உரிமைகளை வென்றெடுக்க மேற்கொள்ளப்பட்ட சாத்வீகப் போராட்டங்கள் தோற்றுப் போன நிலையில் ஈழ விடுதலை ஒன்றே தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கான ஒரே தீர்வென்றும் அதை ஈட்டுவதற்கான சரியான மார்க்கம் ஆயுதப் போராட்டம் ஒன்றே என்றும் உறுதியாகி விட்ட நிலையிலேயே நாம் ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டோம். எனினும் நாம் இப் போராட்டம் ஓர் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஆயுதப் போராட்டமாக இருக்க வேண்டும் என்றும், இது உழைக்கும் மக்களின் தலைமையில்தான் நடக்க முடியும் என்றும் நம்பினோம். இது வெறுமனே மண்மீட்புப் போராட்டமாக அல்லாமல் ஒரு சமதர்ம ஈழத்தை நிறுவுவதற்கான போராட்டமாக அமைய வேண்டுமென்றும் கூறினோம். அதனால் நாம் தனி நபர் பயங்கரவாதச் செயல்களை நிராகரித்து மக்கள் அமைப்புக்களை கட்டுவதற்கான பணியில் ஈடுபட்டோம்.

1981 ம் ஆண்டு நடைபெற்ற எமது அமைப்பாளர் மாநாட்டில், எமது ஸ்தாபன வேலைகளை வகுத்துக் கொண்டு காங்கிரசை கூட்டுவதற்கான தயாரிப்பு வேலைகளைத் திட்டமிட்டோம். அதன்படி எமது முதலாவது காங்கிரசை 1984 ஆம் ஆண்டு நடாத்தி முடித்தோம். அக் காங்கிரஸ் நடக்கும் பொழுது தான் நாம் எமது வெகுஜன அமைப்புக்களையும், முன்னணி அமைப்புக்களையும், இராணுவ அமைப்பையும் பரவலாகவும், பலமாகவும் கட்டி எழுப்பி இருந்தோம். ஈழ மாணவர் பொது மன்றம், ஈழ வாலிபர் முன்னணி, ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி, ஈழத் தொழிலாளர்கள் விவசாயிகள் முன்னணி, கடற் தொழிலாளர் முன்னணி என்பவற்றைக்கட்டி இருந்த துடன், மலையகத்திலும் பெருந் தோட்டத் தொழிலாளர் முன்னணி என்ற தொழிற்சங்கத்துக்கான ஆரம்ப வேலைகளும் மேற் கொள்ளப்பட்டிருந்தது. இவை அனைத்தையும் ஒன்றிணைத்து ஈழ மக்கள் விடுதலை முன்னணி என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தி இருந்தோம். அதேவேளை எமது



படிப்பகம்

www.padippakam.com

இராணுவ அமைப்பான மக்கள் விடுதலைப்படையையும் நிர்மாணித்து வந்தோம். முதலாவது மகாநாட்டில் இருந்து முதலாவது காங்கிரஸ் வரையிலான காலகட்டத்தில் எமது மக்கள் அமைப்புக்கள் ஊடாக பல்வேறுபட்ட வெகு ஜனப் போராட்டங்களை நடாத்தி இருந்தோம். கூடவே ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளையும் ஆரம்பித்திருந்தோம். ஸ்தாபனத்துள் அரசியல் வகுப்புக்கள் மூலம் தோழர்களை பெருமளவு அரசியல் மயப்படுத் தியிருந்தோம். இத்தகைய சூழ்நிலையில் தான் எமது முதலாவது காங்கிரசை நடாத்தினோம். எமது முதலாவது காங்கிரஸ் எமது அரசியல் திட்டத்தையும், வேலைத் திட்டத்தையும் வரைவு செய்து அதை வழிநடத்துவதற்குரிய மத்திய கமிட்டியையும், செயலாளர் நாயகத்தையும் தெரிவு செய்தது. இந்த அத்திவாரத்துடன் தான் எமது போராட்டப் பயணம் முன்னெடுக்கப் பட்டது. எமது விடுதலைப் போராட்டமானது பல்வேறு திருப்பங்களை எடுத்தது. அதற்கு ஏற்ப எம்முடைய பாதையையும் நெளிவு சுழிவுகளைக் கொண்டதாக அமைய வேண்டி இருந்தது.

ஆரம்பத்தில் சாத்வீகப் போராட்டமாக அமைந்திருந்த போராட்டம். அதன் தோல்விகளின் பின்னர் ஆயுதப் போராட்ட மாக பரிணமித்ததை குறிப்பிட்டிருந்தேன். இது ஓர் மக்கள் போராட்டமாக அமைவதன் மூலமே இப்போராட்டம் சரியான திசை வழியில் செல்லமுடியும் என்று நாம் நம்பினோம். அதன் அடிப்படையிலேயே எமது வேலை முறைகளும் அமைந் திருந்தன. இருப்பினும் இப் போராட்டத்தில் பல்வேறு பட்ட பிற்போக்கு சக்திகளும் செயற்பட்டுக் கொண்டிருந்தன. அவை தமிழ் இனவாத உணர்வுகளைத் தூண்டுவதாகவும், வீரதீரச் செயற்பாடுகளில் (adventurism) நம்பிக்கை கொண்டனவாகவும் இருந்தன. இவற்றின் விளைவுகளால் ஏற்படும் மக்கள் அழிவு களைப்பற்றி இவர்கள் கவலைப்பட்டதே கிடையாது. இத்தகைய குணாம்சங்களுடன் காலப்போக்கில் அவை மக்கள் விரோத நடவடிக்கைகளிலும் இறங்கத் தொடங்கின.

1983 ஜூலைக் கலவரம் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு பாரிய மாற்றத்தை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து படிப்படியாக முன்னேறி வந்த விடுதலைப் போராட்டமானது ஒரு திடீர்



படிப்பகம்

www.padippakam.com

வேகத்தை அடைந்தது. இது ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஓர் எழுச்சியாக இருந்த போதும் பின்னால் பல பிரச்சனைகளுக்கும் காரணமாக இருந்தது. பெருந்தொகையான இளைஞர்களையும், யுவதிகளையும் போராட்டத்தின் பால் உந்தித் தள்ளிய போதும், அவர்களில் பெரும்பாலானோர் பழி வாங்கும் உணர்வினாலும், ஆயுத மோகத்தாலும், கவரப்பட்டு வந்தவர்களாகவே இருந்தனர். இவ் எழுச்சியை உள்வாங்க வேண்டிய கட்டாயம் போராட்டத்திற்கு இருந்தாலும், அதன் அடுத்த கட்டமாக இவர்களை அரசியல் மயப்படுத்தி சரியான திசைவழியில் இட்டுச் செல்ல வேண்டிய கடமையை அநேகமான இயக்கங்கள் செய்யவில்லை. இதில் எமது ஸ்தாபனம் தோழர்களை அரசியல் மயப்படுத்தும் பணியில் தன்னாலான முழு முயற்சிகளையும் மேற் கொண்டு கணிசமான அளவு நிறைவேற்றி இருந்த போதிலும் முழுமையான வெற்றி ஈட்டவில்லை. இந்தக் குறைபாடு பிற்பாடு எமது ஸ்தாபனத்தில் சில ஒழுங்கீனங்களுக்கு காரணமாகி எமது ஸ்தாபனத்திற்கு அபகீர்த்தி ஏற்படவும் காரணமாய் இருந்தது. எனினும் நாம் இக் கடமையை உணர்ந்திருந்தோம் என்பதுடன் அதற்கான திட்டங்களை வகுத்து ஒப்பீட்டளவில் ஏனைய ஸ்தாபனங்களை விட மிகவும் அதிக அளவில் செயற்படுத்தியிருந்தோம் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது. எனினும் மொத்தமாக ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்டிருந்த இக் குறைபாடானது அரசியலைப் புறக்கணித்து ஆயுதத்தை முதன்மைப்படுத்தும் போக்கை ஏற்படுத்தியது. இவ் வீக்கத்தால் இயக்கங்களுக்கு மேலதிக ஆயுதங்களும், நிதியும் பெருமளவில் தேவைப்பட்டது. நிதியை ஈட்டிக் கொள்ளும் முயற்சியில் தெளிவற்ற இவர்கள், போதைப் பொருள் கடத்தல், மக்களிடம் இருந்து பணம் பறித்தல் போன்ற மக்கள் விரோத நடவடிக்கைகளில் இறங்கின. அத்துடன் வெளி நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களையும், தமிழ்நாட்டு மக்களையும் இனவாத உணர்வினடிப்படையில் திருப்தி செய்து அவர்களிடம் ஆதரவும் நிதியும் திரட்டிக் கொள்ளும் முகமாக அப்பாவிச் சிங்கள மக்கள் மீது படுகொலைகளிலும் இறங்கினர். இந்நிலைமை இந்தியாவை பின்தளமாக கொண்டிருந்த இவர்களை இந்தியாவின் பல்வேறு அரசியற் கட்சிகளதும் செல்வாக்குகளுக்கு உட்படுத்தியது. அத்துடன் சர்வதேச பிற்போக்குச் சக்திகளது ஊடுருவல் எமது



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்திற்குள்ளும் ஏற்பட வழிவகை செய்தது. இத்தகைய தவறான போக்கை உணர்ந்து கொண்டு, இதை நிறுத்தி சரியான ஒருமுகப்பட்ட பாதையில் இப் போராட்டத்தை இட்டுச் செல்லவும், எம்மிடையே ஐக்கியத்தை நிலை நாட்டவும் கருதி எமது செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபாவின் முன் முயற்சியால் ஈழத்தேசிய விடுதலை முன்னணி என்ற ஐக்கிய முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. இந்த ஐக்கிய முன்னணியின் தோற்றம் ஈழ விடுதலை போராட்ட வரலாற்றில் ஓர் நம்பிக்கை கீற்றை ஏற்படுத்துவதாய் இருந்தது. இக்கட்டத்தில் நடந்த திம்புப் பேச்சுவார்த்தை சர்வதேச ரீதியில் எமது போராட்டத்தின் நியாயத் தன்மையை வெளிப்படுத்தியதுடன் விடுதலை இயக்கங்களுக்கான அங்கீகாரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தது. எனினும் இவ்வளர்ச்சியும், மகிழ்ச்சியும் அதிக நாள் நீடிக்கவில்லை. 86ம் ஆண்டு விடுதலைப் புலிகளின் சக இயக்கப் படுகொலைகள் விடுதலைப் போராட்டத்தின் போக்கை முற்றாக சீர்குலைத்தது. இத்துடன் இப்போராட்டப் பாதையில் பாரிய திருப்பம் ஏற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே உள்ளியக்கப் படுகொலைகளின் மூலமாகவும், ஏனைய சிறிய இயக்கத் தலைவர்களை கொலை செய்ததன் மூலம் தமது அதிகாரத்துவக் குணாம்சத்தை வெளிப்படுத்தி இருந்தனர். 86ம் ஆண்டு ரெலோ இயக்கம் மீதான நயவஞ்சகத்தனமான தாக்குதலில் இருந்து இது ஏனைய சகோதர இயக்கங்களை அழித்தொழிக்கும் எதிர்ப்புரட்சிகர நடவடிக்கையாக வெளிப்படையான வடிவத்தை எடுத்தது. இது ஈழ விடுதலைப் போராட்டத்தில் சர்வதேசப் பிற்போக்கு சக்திகளின் ஊடுருவலின் அபாயகரமான நிலைமையை எடுத்துக் காட்டுவதாய் இருந்தது. ஈழ விடுதலைப் போராட்டத்திலிருந்து முற்போக்கு சக்திகளை அகற்றவும், இந்தியாவிற்கெதிரான நாசகார வேலைகளை மேற்கொள்ளவும் தமக்கு மிகவும் வாய்ப்பான கருவியாக எல்.ரி.ரி.ஈ. ஐ அவர்கள் இனம் கண்டார்கள். அதே வேளை இத்துரோகம் எல்.ரி.ரி.ஈ. இன் தவறல்ல, அவர்களைச் செலுத்திய சர்வ தேச பிற்போக்கு சக்திகளின் தவறுதான் என்ற தவறான வியாக்கியானத்தை இதிலிருந்து யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏனெனில் புலிகளின் உள்ளக்கிடக்கையாக இருந்த இந்த ஆதிக்க வெறியை



படிப்பகம்

www.padippakam.com

செயற்படுத்துவதற்கு ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கிய கூட்டாளிகளாக இவை இருந்தனவேயொழிய எல்.ரி.ரி.ஈ.ன் விருப்பத்துக்கு மாறாக அவற்றை இச் செயற்பாட்டிற்கு நிர்பந்தித்தவையாக இருக்கவில்லை. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல சர்வதேச போதை வஸ்துக் கடத்தலில் ஈடுபட்ட புலிகளின் பல முக்கிய பொறுப்பாளர்கள் இன்றும் பல மேற்கைரோப்பிய நாடுகளில் சிறைகளில் வாடுவதைக் காணலாம்.

சர்வதேச பிற்போக்கு சக்திகளின் பலமான உதவிகளுடனும் இந்தியாவின் சில இனவாதக் கட்சிகளின் பொருளாதார மற்றும் ஆதரவுகளுடனும் தான் ஏற்கனவே குறிப்பிட்ட போதை வஸ்துக் கடத்தல், மக்களை மிரட்டிப் பணம் பறித்தல், அப்பாவிச் சிங்கள மக்களை தாக்கி சூறையாடுதல், அதனை இனவாத அடிப்படையில் மூலதனமாக்கி வெளிநாட்டுத் தமிழரிடையே நிதி திரட்டுவது போன்ற மக்கள் விரோத மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் மூலமாகவும் . புலிகள் பலப்படுத்தப் பட்டிருக்கின்றனர். மறுபுறம் நாம் இவ்வழி வகைகளை முழுமையாக நிராகரித்திருக்கிறோம். எமக்கு உதவக் கூடிய முற்போக்கு சக்திகள் ஒன்றில் உதவ முடியாமலிருந்தன. அல்லது உதவ முன் வராமல் இருந்தன. இலங்கையின் இடதுசரி கட்சிகள் தேசிய இனப் பிரச்சனையின் சாராம்சத்தையே புரிந்து கொள்ளாதவர்கள் போல, எம்மை தீவிரவாதிகளென விமர்சித்து வந்தார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளும் வெறும் மனிதாபிமான ஆதரவுடன் மட்டுப்படுத்திக் கொண்டார்கள். எம்மை ஏற்றுக் கொண்ட சர்வதேச விடுதலை இயக்கங்கள் எமக்குத் தேவையான உதவிகளை வழங்க முடியாத நிலையிலிருந்தார்கள். இத்தகைய நிலையிலிருந்த நாம், இராணுவ ரீதியாக மிகவும் பலப்பட்டிருந்த விடுதலைப் புலிகளுக்கு ஈடுகொடுத்து எமது அரசியல் போராட்டங்களை நடத்தினோம் என்பது மிகவும் பெருமைப்பட வேண்டிய விடயம்.

1986 டிசம்பர் மாதம் விடுதலைப் புலிகள் எம்மைத் தாக்கிய போது, புலிகளை நாம் விமர்சித்ததாலேயே புலிகள் எம்மைத் தடை செய்தார்கள் என்று சிலர் கூறுகின்றனர். இவர்களுக்கு நாம் கூறுவது என்னவென்றால் தவறுகளை விமர்சிப்பதும்,



படிப்பகம்

www.padippakam.com

அவற்றை மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதும் ஒவ்வொருவரதும் உரிமை. எம்மீது தாக்குதல் தொடுப்பார்கள் என்ற காரணத்தால் தவறுகளைச் சுட்டிக்காட்டாமல் மௌனம் சாதிப்பதுதான் சரியான காரியமென்றால், இலங்கை அரசிற்கு எதிராக மட்டும் ஏன் போராடத் துணிந்தோம்? நாம் விடுதலைப் புலிகளை மட்டும் விமர்சிக்கவில்லை. தவறுகள் எங்கு ஏற்பட்டபோதும் நாம் அவற்றை விமர்சித்தோம். ஏனைய இயக்கங்கள் தவறிழைத்தபோதும்கூட அவற்றை நாம் விமர்சித்தே வந்திருக்கின்றோம். உதாரணத்திற்கு கூறுவதானால், விடுதலைப் புலிகள் உறுப்பினர் சிலரை புளொட் இயக்கம் சுழிபுரத்தில் கொலை செய்து புதைத்தமையை கண்டித்தோம். ரெலோவின் உட்கட்சி மோதலில் யாழ் வைத்திய சாலையில் தாஸ் என்னும் போராளியை கொலை செய்தமையை கண்டித்தோம். ஈரோஸ் கொழும்பில் நடத்திய குண்டு வெடிப்பால் நூற்றுக்கணக்கான அப்பாவிச் சிங்கள மக்கள் கொலை செய்யப்பட்டபோது அதனையும் நாம் கண்டித்தோம். இதே போன்று பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் புலிகளால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட போதும், ரெலோ மீதும் ஏனைய விடுதலை இயக்கங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும் நாம் மிகவும் வன்மையாகக் கண்டித்தோம். நாம் எப்பொழுதுமே இயக்கங்களுக்கு உள்ளும் புறமும் ஜனநாயகத்தை காப்பாற்ற குரல் கொடுத்தே வந்தோம். புலிகளைப் பொறுத்தவரை அவர்களை விமர்சித்தால் என்ன, விமர்சிக்காவிட்டால் என்ன, அனைத்து இயக்கங்களையும் அழித்து தனது தனியாதிக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவை புலிகள் ஏற்கனவே கொண்டிருந்தார்கள். அது முழுமையான உண்மை என்பது இன்று புலனாகிறது. புலிகளின் சகல பாசிசத் தன்மைகளையும் மறைத்து அவர்கள் ஒரு Resistance Force என்று ஈரோஸ் கூறிவந்தது. அவர்களது ஒத்துழைப்புடன் பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். இன்று ஈரோஸ் எங்கே? தமது அமைப்பையே கலைக்க வேண்டிய சூழ்நிலை. இன்று புலிகளுடன் சங்கமித்துள்ளார்கள். எனவே அன்றைய சூழ்நிலையில் எம்முடைய பின்னடைவுக்கான காரணங்களை மனம் போன போக்கில் சிந்திக்காமல் தர்க்க நியாயங்களுடன் நாம் ஆராய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

புலிகளின் இவ்வெதிர்ப்புரட்சிகர செயற்பாட்டினால், ஈழ விடுதலைப் போராட்டம் சின்னா பின்னமடைந்து, சிறீலங்கா இராணுவம் வடகிழக்கை முழுமையாக தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்து கொண்டிருந்தது. இறுதியாக யாழ் குடாநாட்டிலும் ஒபறேசன் லிபறேசன் என்ற இராணுவத் தாக்குதல் மூலம், வடமராட்சியையும் இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இச் சமயத்தில்தான் இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது. இவ்வொப்பந்தத்தில் பல குறைபாடுகள் இருந்தபோதும், அவற்றை நாங்கள் சுட்டிக் காட்டி அவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொண்டோம். ஏனெனில் விடுதலைப் போராட்டம் என்ற பெயரில் அநியாயமாக மக்கள் கொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள், புலிகளின் குருட்டுத்தனத்தால், வடகிழக்கே நாசமாகிக் கொண்டிருந்தது. இக்காலகட்டத்தில்தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஓர் இடைக்காலத் தீர்வாக நாம் ஏற்றுக் கொண்டோம். அச் சந்தர்ப்பத்தில்கூட புலிகள், தாம் விட்ட தவறுகளை உணர்ந்து ஐக்கியப்படுவதற்கு முன்வரவில்லை. மாறாக மட்டக்களப்பில் மீண்டும் புளொட் தலைவர்களை கொலை செய்யத் தொடங்கினார்கள். அதிலிருந்து ஏனைய சகல உறுப்பினர்களையும் கொலை செய்யத் தொடங்கினார்கள். அது மாத்திரமல்லாமல் இந்திய அமைதி காக்கும் படைக்குமெதிராக யுத்தத்தை ஆரம்பித்தனர். இதனால் எம்மை தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை தோன்றியது.

## இந்திய – இலங்கை ஒப்பந்தமும், எமது பங்களிப்பும்

புலிகள் எந்த ஒரு அரசியற் கட்சியோ அல்லது மக்கள் அமைப்புக்களோ செயல்படுவதை தடை செய்தனர். அவர்களும் அவர்கள் சார்பானவர்கள் மாத்திரமே வாய் திறக்கலாம். இந் நிலையில் மக்களுக்கு உண்மையை விளங்கப்படுத்தி ஜனநாயக சூழ்நிலை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் எமக்கு ஏற்பட்டது. மக்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களைச் சொல்வதன் மூலமே ஈழ விடுதலைப் போராட்டத்தை புனருத்தாரணம் செய்ய முடியும், என்ற நிலையில் எல்லோரையும் பேச வைக்க வேண்டுமென்று விரும்பினோம். ஆனால் புலிகளின் துப்பாக்கிகளுக்கு முன், மக்களுக்கு அவ்வளவு தைரியம்



படிப்பகம்

www.padippakam.com

வரவில்லை. இதனால் எமது முயற்சியும் பெரியளவில் வெற்றியளிக்கவில்லை. அதே சமயம் இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்காக உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபை முறை உருவாக்கப்பட்டது. இதற்கிணங்க மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப்பட்டன. ஆனால் வட – கிழக்கில் மாத்திரம் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தவில்லை. எனவே மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தும்படி நாம் இந்திய இலங்கை அரசை வற்புறுத்தினோம். நீண்ட போராட்டத்தின் பின்னர் அவர்களும் தேர்தல் வைக்க சம்மதித்தார்கள். புலிகள் தேர்தலை பகிஷ்கரித்தனர். ஏனைய இயக்கங்கள் யுத்தம் நடைபெறும் பொழுது தேர்தலில் போட்டியிட முடியாது என பின் வாங்கின. தமிழர் விடுதலைக் கூட்டணி கூட இது தேர்தலுக்கு உகந்த தருணம் இல்லை எனக் கூறியது. இறுதியில் வடக்கில் போட்டி இல்லாமல் மாகாண சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப் பட்டனர். கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப்., யூ. என்.பி., எஸ்.எல்.எம்.சி. ஆகியவை களத்தில் நின்றன. இதில் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைதி, ஜனநாயகம், புனர்நிர்மாணம் என்ற கோசத்தை வைத்து மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தோம். மிகப் பெரும்பான்மையான மக்கள் எமக்கு வாக்களித்தார்கள். அவர்களின் வாக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கு கிடைத்த தென்பதிலும் விட அது ஜனநாயகத்திற்கு கிடைத்த வாக்காகவே நாம் கருதினோம். கிழக்கு மாகாணத்தில் 82% மக்கள் தமது வாக்குகளைச் செலுத்தி இருந்தனர் என்பதில் இருந்து, மக்கள் ஜனநாயகச் செயற்பாட்டில் எவ்வளவு அக்கறை கொண்டுள் ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். புலிகள் பகிஷ்கரிக் கும்படி மக்களை மிரட்டியும் கூட நாம் அதிகப்படியான வாக்குகளால் வென்று மாகாண சபையை கைப்பற்றினோம்.

இதன் மூலம், வெளியுலகுக்கு இதுவரை புலிகள் மட்டும் தான் தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று அவர்களின் ஊதுகுழல்கள் கூறி வந்தது போல் இங்கு உண்மை நிலை இல்லை, மாற்றுக் கருத்துக்கள் கொண்ட மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க முடியாமல் இதுவரை காலமும் அடக்கிவைக்கப்பட்டிருந்தார்கள் என்பதுதான் உண்மை நிலை



படிப்பகம்

www.padippakam.com

என்பதை வெளிப்படுத்தினோம். அத்துடன் நாம் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பேசவல்ல நியாயாதிக்கத்தை நிறுவிக் கொண்டோம்.

மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து வட – கிழக்கு மாகாணத்தின் தலைநகரமான திருகோணமலையில் எமது மாகாணசபைச் செயலகத்தை நிர்மாணித்தோம். திருகோணமலையில் எமது செயலகம் அமைவதை அப்போதிருந்த ஜனாதிபதியும் ஏனையோரும் எதிர்த்தனர். ஆனாலும் எமது விடாப்பிடியான முயற்சியாலேயே திருகோணமலையில் மாகாண அரசை நிறுவ முடிந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியினர் திருகோணமலையைத் தலைநகராக்குவோம் என்று மேடைகளில் முழங்கினார்கள். ஆனால், அவர்களால் அதை நிறைவேற்ற முடியவில்லை. நாம் திருகோணமலையைத் தலைநகரமாக்கி அங்கு எமது மாகாண சபையையும் நிறுவினோம். இது நாமும் எமது கட்சியும் சாதித்த மிகப் பெரிய விடயமாகும். $1^1/_2$ வருடம் தான் மாகாண அரசு ஜீவித்திருந்த போதும் கூட வரலாற்றில் அதை யாராலும் மறைக்க முடியாது. சங்கிலியன், பாண்டியன், பண்டார வன்னியனுக்குப் பின்னர் தமிழ் மக்களுக்கென ஓர் அரசமைத்த பெருமை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியையே சாரும். காக்கைவன்னியனைப் போல் எதிரியுடன் சேர்ந்து எமது மாகாண அரசை புலிகள் நாசமாக்காமல் விட்டிருப்பின், நிச்சயமாக அவ்வரசு தொடர்ந்து 5 வருடங்களுக்கு இருந்திருக்கும். ஆனால் மாகாண அரசை தொடர்ந்து செயல்பட அனுமதித்தால் மக்கள் மத்தியில் புலிகள் செல்வாக்கிழந்து, ஆளுமையற்று மக்களே அவர்களை அந்நியப்படுத்தி விடுவார்கள் என்பதால், புலிகள் தமிழ் மக்களின் எதிரியான பிரேமதாசா அரசுடன் சேர்ந்து மாகாண அரசைக் கலைத்தார்கள். எமது வட கிழக்கு மாகாண அரசு அமைக்கப்பட்டபோது, அது தனது கூட்டங்களை நடாத்துவதற்கான ஓர் இடமோ அல்லது அது தனது செயலகத்தை நிறுவுவதற்கான ஓர் இடமோ கூட இருக்கவில்லை. இன்னும் சற்று விரிவாகக் கூறின், திருகோணமலையைப் போன்ற சிறிய நகரத்தில் ஓர் அரசுக்கான உள்ளமைப்பை (Infrastructure) உருவாக்கக் கூடிய எந்த வசதியும் இருக்கவில்லை. இவற்றை



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பதற்கு அரசாங்கமும் சிறிதளவு கூட உதவி செய்ய வில்லை. இருந்தபோதும்கூட மிகவும் சக்தி வாய்ந்த ஓர் செயலகத்தையும், பல்வேறுபட்ட அமைச்சுக்களையும் உருவாக் கினோம். மிகவும் அனுபவம் வாய்ந்த அமைச்சு செயலாளர் களைக் கொண்ட ஓர் நிர்வாக இயந்திரத்தை ஒழுங்கமைத்தோம். எமக்கு முதல் உருவாக்கப்பட்ட ஏனைய மாகாண அரசுகள் இன்றும் கூட தமது நிர்வாக அமைப்புக்களை இன்னும் முழுமையாக உருவாக்காத நிலையில், நாம் ஒருவருட காலத்திற் குள் மேற்கண்ட விடயங்களை சாதித்தோம்.பிரத்தியேகமாக எமது மாகாண அரசின் நிர்வாக இயந்திரத்தை உருவாக்குவதில் எமது கட்சியின் உறுப்பினரும் திருகோணமலையில் எமது கட்சி சார்பாக மாகாண சபைக்கு போட்டியிட்டு வென்றவருமான தோழர் ஜோர்ஜின் பங்களிப்பை எவராலும் மறுக்க முடியாது. அவரை இத்தருணத்தில் நாம் நினைவு கூராமல் விடுவது நன்றி மறந்த செயலாகும். புலிகளின் மிரட்டல்கள், கொலைகள், சிவில் நிர்வாகத்தை சீர்குலைத்தல் போன்ற மோசமான காலகட்டத்தில் தான் நாம் இச் சாதனையை செய்து முடித்தோம். இதுவே ஓர் அமைதியான காலமாக இருக்கும் பட்சத்தில் இன்னும் குறுகிய காலத்திலேயே எம்மால் பல சாதனைகளைச் செய்திருக்க முடியும். இதன் மூலம் நாம் வெறும் போராட்ட இயக்கமல்ல, ஓர் அரசை நிர்வாகிக்கக் கூடிய ஆற்றலும், பக்குவமும் உடையவர்கள் என்பதையும் நிரூபித்தோம்.

நாம் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டது, அதனைத் தொடர்ந்து மாகாண அரசை நிறுவியது போன்ற துணிச்சலான காரியங்களைப் பார்த்ததன் பின்னர்தான், மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட காலம் சரியில்லை என்றவர்களும், அமைதி வரவில்லை என்றவர்களும், பாராளுமன்றத் தேர்தலில் எல்லோருக்கும் முன்பாகவே வேட்பாளர் மனுக்களைத் தாக்கல் செய்தார்கள். வட–கிழக்கில் 10 இற்கும் மேற்பட்ட கட்சிகள் போட்டியிட்டன. இத்தனைக்கும் புலிகளின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்துகொண்டுதான் இருந்தது. வேட்பாளர்கள் மிரட்டப்பட்டார்கள், கொலை செய்யப்பட்டார்கள். இருந்த போதும் குறைந்த பட்சம் 10 கட்சிகள் போட்டியிடக் கூடிய குறைந்த பட்ச சூழ்நிலையை ஏற்படுத்துவதில் நாம் மிகப் பெரும்



படிப்பகம்

www.padippakam.com

பங்குவகித்தோம். பல தோழர்களை புலிகளின் கொலை வெறிக்கு பலி கொடுத்தே இச் சூழ்நிலையை நாம் தோற்றுவிக்க முடிந்தது. மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைத்துவிட்டபோதும் அதனை அமுல்படுத்துவதற்கான ஒவ்வொரு அதிகாரத்தையும் நாம் போராடிப் பெற வேண்டியிருந்தது. மாகாண சபைக்கான அதிகாரப் பரவலாக்கல் குறித்து நாம் இலங்கை அரசாங்கத்துடன் போராடிக் கொண்டே மாகாண சபையை காப்பதற்கும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி அதன் சேவைகள் மக்களுக்கு கிடைக்கும்படி செய்வதற்கும் புலிகளுக்கு எதிராகவும் போராட வேண்டி இருந்தது. இவ்வகையில் இரு வெவ்வேறு வகையான போராட்டங்களை நாம் நடாத்த வேண்டி இருந்தது.

எமது கோரிக்கையில் நாம் காட்டிய உறுதித் தன்மையாலும், இந்திய இராணுவத்தை உடன் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற காரணத்திற்காகவும், பிரேமதாசா அரசு புலிகளுடன் இணைந்து சதித் திட்டம் தீட்டியது. மாகாண சபையை எப்படியாவது கவிழ்க்க வேண்டும் என்று கங்கணம் கட்டினர். இதனால் புலிகளுக்கு பெருமளவு ஆயுதம் கொடுத்தனர். அது மாத்திரமல்லாமல் இந்திய இராணுவம் வெளியேறுவதற்கு பல மாதங்கள் முன்பாகவே சிறீலங்கா இராணுவத்திற்கும் புலிகளுக்கு மிடையே யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. பின்னர் பிரேமதாசா அரசாங்கத்தின் வற்புறுத்தலில் ஐ.பி.கே.எப் இற்கும் புலிகளுக்குமிடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி புலிகளும் அரசும் இணைந்து மாகாணப் பொலிசான சி.வி.எப் ஐயும் அவர்களுக்கு ஒத்தாசையாக நிறுவப்பட்ட ஏ.சி.வி.எப் அல்லது தமிழ் தேசிய இராணுவத்தையும் தாக்கினார்கள். இதில் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் தொண்டர் படையினர் கொல்லப்பட்டனர். இதனால் மாகாண சபைக்கான பாதுகாப்பென்பது முற்று முழுதாக இல்லாமல் போனதாலும் ஏனைய எமது கட்சி உறுப்பினர்களையும், அநியாயக் கொலைக்கு உட்படுத்த வேண்டாம் என்பதற்காகவே நாம் பின்வாங்க நேரிட்டது. இதில் இந்திய அரசு மிக மோசமாக நடந்து கொண்டது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரமும், அதனைத் தொடர்ந்து செப்.18



படிப்பகம்

www.padippakam.com

ஒப்பந்தத்தின் பிரகாரமும் இந்திய அரசு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கு உத்தரவாதமளித்தும், அது முழுமையாக நிறைவேற்றுமுன்னரே இந்திய அமைதிப்படை வெளியேறத் தொடங்கியது. இதனால் புலிகளும், சிறீலங்கா அரசும் இணைந்து மிகச் சுலபமாகவே மாகாண சபையைச் சீர்குலைத்தார்கள். இந்திய அரசு, தான் வாக்குறுதி அளித்த வாறு ஒப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்ற ஒத்துழைத் திருக்கு மாயின், இன்று இலங்கையில் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்பட்டிருக்காது.

எமது மாகாண சபைக் காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் சிங்களக் குடியேற்றம் முற்று முழுதாக தடை செய்யப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் தமது சொந்த வீடுகளில் குடியிருந்தார்கள். இவை மாத்திரமல்ல, யாழ்ப்பாணத்திலிருந்து பொத்துவில் வரை போய் வரக்கூடிய கரையோரச் சாலையொன்றையும் முழுமையாக நிர்மாணிப்பதற்கிருந்தோம். மூதூரில் வட கிழக்கிற்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அனல்மின் நிலையம் போன்றவற்றை உருவாக்கவும், திருகோணமலையில் கைத்தொழில் பேட்டை போன்றவற்றை ஆரம்பிக்கவும் திட்டங்கள் வரைந்திருந்தோம். ஆனால், புலிகள் – அரசுக் கூட்டுச் சதியினால் இவை யாவுமே சீர்குலைக்கப்பட்டது. இன்று வட கிழக்கு புனர் நிர்மாண வேலைகட்காக ஒதுக்கப்பட்ட பணம் சிங்கள மக்களை குடியேற்றவும், அகதிகளைப் பராமரிக்கவும் செலவு செய்யப்படுகின்றது. இப்பணம் யாவும் வட கிழக்கு அபிவிருத்திக் கென வெளி நாடுகளால் வழங்கப்பட்ட பணமாகும். தொடர்ந்தும் இந்நாடுகள் பெருமளவு உதவி அளிக்கத் தயாராய் இருந்தன.

தமிழ் பேசும் மக்களின் ஆட்சி அமைப்பாக உருவாகிய மாகாண சபையை ஸ்தாபிப்பதில் எந்த ஒரு பங்களிப்பும் செய்யாமல் மாறாக அதைச் சீர்குலைப்பதிலேயே ஆர்வத்தை செலுத்தி வந்த புலிகள், ஈற்றில் இந்த மாகாண சபையை கலைக்கும் அதிகாரத்தை இலங்கை அரசு ஏற்படுத்திக் கொள்ள வழிவகுத்ததன் மூலம் தமிழ் பேசும் மக்களின் நலன்களைப் பலி கொடுத்தும் தனது தனியாதிக்க வெறியை பூர்த்தி செய்யத் தயங்க மாட்டாது என்பதையே நிரூபித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

## தென்னிலங்கை – பாராளுமன்ற அரசியல் நடவடிக்கை களில் எமது பங்களிப்பு

இவற்றுக்கு அப்பால் நான் இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும் என நம்புகிறேன். இந்திய இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்து மாகாண அரசை நிறுவுவதில் நாம் எவ்வளவு அக்கறை செலுத்தினோமோ அதேயளவு அக்கறையுடன் நாம் தென்னிலங்கையிலும், செயல்பட்டோம். இடது சாரிகளுடன் எமது ஐக்கியத்தை நாம் வலுப்படுத்தினோம். எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அரசுக்கெதிரான போராட்டங்களில் பங்குபற்றினோம். மாகாண சபைக்கான அதிகாரங்களை பெறுவதை முதற்கடமையாகக் கொண்டு பாராளுமன்றத்திலும் செயற்பட்டு வந்தோம். சகல தமிழ் கட்சிகளும் அரசுடனும் இராணுவத்துடனும் சேர்ந்து செயற்பட்டு வரும்போது நாம் மாத்திரம் யாருடனும் இணையாமல் அரசின் அநியாயக் கொலைகளையும் புலிகளின் பாசிச நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திலும், வெளியிலும் அம்பலப்படுத்தி வந்தோம். இதனால் எமது பல தோழர்கள் சிங்கள இராணுவத்தால் கொழும்பில் இருந்து கடத்தப்பட்டார்கள். இதில் சிலர் இருக்கிறார்களா? இல்லையா? என்பதைக் கூட அறிய முடியாமல் உள்ளது. எம்மையும் தம்முடன் இணைந்து புலிகளுக்கெதிராக வேலை செய்யும்படி இராணுவம் கேட்டது. இதனை ஏற்காததால் எமக்கு அரசால் பல நெருக்குவாரங்கள் ஏற்பட்டன. புலிகள் அரசுடன் கூட்டுச் சேர்ந்து எம்மை அழித்ததைப் போல் நாமும் அரசுடன் சேர்ந்து புலிகளை பழிவாங்கியிருக்க முடியும். ஆனால் அதனை நாம் செய்யவில்லை. ஏனெனில் புலிகளை அழித்து முடிந்ததும் இவ்வரசு எமக்கெதிராகத்தான் திரும்புவார்கள் என்பதை நாம் மிகவும் தெளிவாகவே புரிந்து வைத்திருக்கின்றோம். இவர்கள் மிகச் சுலபமாக இப் பிரச்சனைக்குத் தீர்வு காணப் போவதில்லை. ஓர் இயக்கத்தை பாவித்து மற்ற ஓர் இயக்கத்தை அழிக்கவே வேலை செய்து வருகின்றார்கள். புலிகளும், இதற்கு முன்னோடியாக மிகத் தாராளமாகவே நடந்து காட்டியுள்ளன. ஐ.பி.கே.எப். உடன் இணைந்து வேலை செய்ய முடியுமாயின், ஏன் சிறீலங்கா இராணுவத்துடன் இணைந்து வேலை செய்ய முடியாது என்றும் சிலர் வினவுகின்றனர். அவர்களுக்கு நாங்கள்



படிப்பகம்

www.padippakam.com

சொல்லக் கூடியது இதுதான், ஐ.பி.கே.எப் ஒரு புறத்தில் புலிகளின் பாசிசத்துக்கும், அராஜகத்துக்கும் எதிராக போராடிய அதே சமயம், ஓர் அரசியல் தீர்வொன்றிருந்தது. மாகாண அரசொன்று நிறுவப்பட்டது. எல்லோரையுமே ஜனநாயகப் பாதைக்கு கொண்டு வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இலங்கை அரசிடம் இதுவரை ஓர் அரசியல் தீர்வில்லை. சர்வகட்சி மாநாடு, பாராளுமன்றத் தெரிவுக்குழுவென காலம் வீண் விரயமாகின்றதே அல்லாமல் தீர்வுகாண இவர்கள் இன்னும் தயாராகவில்லை என்பதே உண்மை. இடதுசாரிக் கட்சிகளுடன் நாம் கொண்டிருந்த நல்லுறவால் யாழ்ப்பாணத்தில் ஒரு இடத்தை நாம் கம்யூனிஸ்ட் கட்சிக்கு விட்டுக் கொடுத்தோம். அதே போல் மலையகத்தில் யூ.எஸ்.எப். சார்பாக எமது தோழர் ஒருவர் போட்டியிட்டார். இவ் வகையில் பாராளுமன்றத்துக்கு உள்ளும் புறமும் ஈ.பி.ஆர்.எல்.எப் தனது கடமையைச் செய்து வருகின்றது.

முன்னர் நான் குறிப்பிட்டது போல் இத் தேர்தலில் கூட தமிழ் கட்சிகளின் ஒன்று பட்ட தன்மையை வெளிக்காட்ட வேண்டும் என்ற காரணத்திற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பதாகையின் கீழ் நாம் போட்டியிடச் சம்மதித்தோம். 'எமக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் மிகக் குறைவாக இருந்தும்கூட இவ்வொற்றுமையை காக்கும் நோக்கத்துடன் இதனை ஏற்றுப் போட்டியிட்டு நாம் போட்டியிட்ட இடங்களில் வெற்றியீட்டினோம். பின்னர் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் புலிகளால் கொல்லப்பட்ட போதும், அந்த இடங்கள் எமது உறுப்பினர்களால் நிரப்பப்படாமல் (ரி.யு.எல்.எப்) தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களாலேயே நிரப்பப்பட்டது. இந்த அநீதிக்குப் பின்னரும் கூட நாம் பெருந்தன்மையுடன் பொறுத்துக் கொண்டு, தமிழ்க்கட்சிகளின் கூட்டுக்காக உழைத்து வருகின்றோம். குறைந்த பட்சம் தமிழ் மக்களின் பிரச்சனைக்கான தீர்வை ஒரே குரலில் வைக்கக்கூடிய அளவுக்கு இக்கூட்டை வைத்துள்ளோம்.

எம்முடைய இவ்வகையான பக்குவமான அணுகு முறைகளினூடாக தமிழ் கட்சிகளிடையே ஒருமித்த போக்கை கடைப்பிடிக்கக்கூடிய ஒரு இணக்கம் உருவாக வகை செய்ததுடன்,



படிப்பகம்

www.padippakam.com

முஸ்லீம் கட்சிகளுடனும் ஓர் இணக்கத்துக்கு வர முயற்சித்து வருகின்றோம். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தலைவர் தொண்டமானும் கூட எமது நிலைப் பாடுகளை ஆதரிக்கக் கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ளோம். திரு. தொண்டமான் முன்னர் புலிகளைத் தவிர தமிழ் கட்சிகள் அருகதையற்றவை என்று கொண்டிருந்த மனப்பாங்கை நாம் எதிரி மனோபாவத்துடன் கையாளாமல் பக்குவமான அணுகுமுறை மூலம் எமது நிலைப்பாட்டை ஆதிரிக்கக் கூடியவாறு மாற்றம் பெற வைத்துள்ளோம்.

இதே சமயம், நாம் மட்டக்களப்பு, வவுனியா போன்ற இடங்களில் எமது காரியாலயங்களை அமைத்து எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக நின்று மக்களுக்கான சேவைகளை வழங்கக் கூடியவாறு எமது வேலைகளை விஸ்தரித்துள்ளோம். திருகோணமலை, மன்னார் போன்ற பகுதிகளிலும் இவ்விதம் வேலைகளை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அரசாங்கத்துடன் ஒத்துழைக்காமல் இவ்விடங்களில் நின்று வேலை செய்வது என்பது ஆபத்தான போதும் கூட இவற்றை நாம் செய்து வருகின்றோம்.

## முன்னேற்றப் பாதையில் அடுத்த கட்டம் நோக்கி

தோழர்களே நாம் கடந்து வந்த பாதையையும் எம்முடைய பங்களிப்புக்களையும் இது வரை ஓரளவுக்கு உங்களுக்கு நான் விபரித்துள்ளேன். இங்கு சமர்ப்பிக்கப்படவிருக்கும் பல்வேறுபட்ட அறிக்கைகளும், இதனை இன்னும் விரிவாக கூறும் என்று எதிர்பார்க்கிறேன். இன்றைய நிலையுடன் தொடர்பு படுத்தி இன்னும் சில விடயங்களை நாம் ஆராய வேண்டும் என நம்புகின்றேன். எமது முதலாவது காங்கிரஸ் நடந்தபோது இருந்த நிலைமைகள் இன்று இல்லை. இன்று இலங்கையிலும் வெளி உலகத்திலும் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவது காங்கிரசில் நாம் பிரதானமாக ஒரு எதிரியும் – பொது எதிரியுமான சிறீலங்கா அரசைப் பற்றிச் சிந்தித்தோம். இன்று இரண்டு எதிரிகளைப் பற்றி அதாவது தமிழீழ விடுதலைப் புலிகள், சிறீலங்கா அரசு ஆகிய இரண்டையும் பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். அன்று நாம் ஆயுதப் போராட்ட



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பாக இருந்தோம். இன்று நாம் இலங்கை அரசியலின் ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து கொண்டவர்களாக உள்ளோம். அன்று இருந்த சர்வதேச சூழ்நிலை இன்று முற்றாக மாறியுள்ளது. அன்று நாம் எமது போராட்டத்தில் ஒன்றுபட்ட மக்களென கருதியிருந்த தமிழ் மக்கள், முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் இன்று தனித்துவமான வெவ்வெறு பிரச்சனைகளை எதிர் நோக்குகின்ற நிலமை தோன்றியுள்ளது. இந்நிலையில் நாம் சகல புதிய மாற்றங்களையும் கருத்திற்கெடுத்து இந்த காங்கிரஸில் எமது அடுத்த கட்ட நடவடிக்கைகளை செப்பமாக தீர்மானிக்க வேண்டும். இன்றைய இலங்கை அரசு இன்னும் இப்பிரச்சனையில் தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்க விருப்பமற்றதாகவே இருக்கின்றது. அது தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக மிகவும் பலவீனமாக்கி, அவர்களுடன் பேரம் பேசவே விரும்புகின்றது. புலிகள் பலவீனப்பட்டால் தாம் சொல்வதை புலிகள் வேறு வழியில்லாமல் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் சிறீலங்கா அரசு நம்புகின்றது. புலிகளின் வாழ்வா சாவா என்ற பிரச்சனையில் புலிகள் சிறீலங்கா அரசின் முடிவுகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்றும் எதிர்பார்க்கலாம். அதே சமயம், வட மாகாணத்தில் புலிகள் போன்ற இந்திய எதிர்ப்பு வாதிகளை வைத்திருக்கவே பிரேமதாசா விரும்புவார். அவருடைய ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கும் அதுவேதான் விருப்பமாக இருக்கும். ஈ.பி.ஆர்.எல்.எப். போன்ற அமைப்புக்கள் இவர்களுடைய குள்ளத்தனமான வேலைகளுக்கு ஒத்துவராதாகையால், எப்பொழுதும் இந்திய எதிர்ப்பு குழுக்கள் இருப்பதே அவர்களது நலன்களுக்கு உகந்ததாயிருக்கும். இந்நிலையில் பிரேமதாசா அரசு புலிகளை முழுமையாக அழிக்குமென்றோ, முழு ஆயுதங்களையும் களையும் என்றோ எதிர்பார்க்க முடியாது.

மறுபுறம், இது பெருமளவு நிதியை உற்பத்தியற்ற அநியாயச் செலவாக யுத்தத்துக்கு செலவழித்து வருகின்றது. அதன் பளுவை வரியாகவும் விலைவாசி உயர்வாகவும் மக்கள் மீது சுமத்துகிறது. மேலும் மிக மோசமாக வெளிநாட்டுக் கடன் களுக்குள்ளும் மூழ்கிக் கொண்டு போகின்றது. ஒவ்வொரு



படிப்பகம்

www.padippakam.com

இலங்கைப் பிரசையும் வெளிநாட்டுக் கடனாக 60,000 கொடுக்க வேண்டியவர்களாக உள்ளார்கள். அதனால் நாட்டின் செல்வா தாரங்களை வெளி நாடுகளுக்கு அடகு வைக்கும் நிலையை அடைந்துள்ளது. வெளிநாடுகளதும், உலக வங்கியினதும், சர்வ தேச நாணய நிதியத்தினதும் வற்புறுத்தலால் இலங்கையின் சகல அரசுடைமை அமைப்புக்களுமே தனியார் மயமாக்கப்பட்டு வருகின்றன. போக்குவரத்தும், தொலைபேசி, கம்பனிகள், தொழிற்சாலைகள், பெருந்தோட்டங்கள் உட்பட சகலமுமே தனியார் கைக்குப் போயுள்ளன. நாட்டின் தொழிலாளர் வர்க்கத் திற்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லாத சூழ்நிலையே தோன்றி வருகின்றது. ஏற்கனவே தேயிலைத் தோட்டங்களில், தொழிலாளர்களுக்கு இவர்களால் பல்வேறுபட்ட பிரச்சனைகள் ஆரம்பித்து விட்டன. அதே சமயம், இவற்றுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழாமல் அவர்களுடைய கவனத்தை திசை திருப்ப "கம் உதாவ" போன்ற பெருங் கண்காட்சிகள் வருடாந்தம் நடாத்தப்படுகின்றன. இதற்கு பல நூறு மில்லியன் ரூபாக்களை வருடாந்தம் செலவு செய்கின்றார்கள். இலங்கை ரூபாயின் பெறுமதி படுவேகமாக வீழ்ச்சி அடைந்து வருகின்றது. இதே வேளை இவ்வரசு பத்திரிகைச் சுதந்திரம், அரசு சார்பற்ற பொது ஸ்தாபனங்களின் சுதந்திரம் போன்றவற்றை கட்டுப்படுத்த முனைகின்றது. உத்தியோகப் பற்றற்ற தணிக்கை முறை ஏற்னவே பத்திரிகைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அரசு செய்தி பரிவர்த்தனைச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, அரசு பத்திரிகைகளாகியவை ஆளும் கட்சியின் பிரச்சார சாதனமாக மாற்றப்பட்டுள்ளன. சட்ட ரீதியான நிர்ப்பந் தங்கள் ஒருபுறமிருக்க சட்டத்துக்குபுறம்பான வழிவகைகளையும் தனது இந்நோக்கத்திற்காக கையாண்டு வருகின்றது.

அரசின் அடாவடித்தனங்கள் ஒருபுறமிருக்க, இலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகள் என்ன செய்கின்றன? எந்த ஓர் எதிர்க் கட்சியும் பிரச்சனையை தீர்ப்பதற்கான அக்கறையை கொண்டுள்ளதாக தெரியவில்லை. அவை இப்பிரச்சனை யானது இலங்கையின் ஒரு பகுதி மக்களின் ஜீவ மரணப் பிரச்சனை என்பதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. மாறாக இப்பிரச்சனையை தமது அரசியல் லாபத்தின் கண்கொண்டே



படிப்பகம்

www.padippakam.com

அணுகுகின்றன. இது தொடர்பான நமது நிலைப்பாடுகளை நியாயத்தின் அடிப்படையில் தீர்மானிக்காமல், தேர்தலில் சிங்கள மக்களின் வோட்டுக்களை இழக்க நேரிடுமோ, தமிழ்மக்களின் வாக்குகளை வென்றெடுக்க முடியுமோ, என்ற கணக்கைப் போட்டுப் பார்த்தே தீர்மானிக்க முனைகின்றன. மேலும் எதிர்க் கட்சியும், ஆளும் கட்சியும் ஒருவர் செய்யும் எதையும் மற்றவர் எதிர்ப்பது என்ற மனோபாவத்தை கொண்டிருக்கின்றன. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்குவதில் ஒருவர் சற்றேனும் முன் வந்தால் அதை சிங்கள மக்களுக்கு துரோகமிழைத்ததாக காண்பித்து அவரை வீழ்த்துவதற்காகப் பாவிக்கலாமென்றே மற்றவர் முயற்சிக்கும் போக்கே உள்ளது. மறுபக்கத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள், அவர்களது குணாம்சத்தைப் பற்றி முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் பாசிச வாதிகள், அவர்களது குறிக்கோள் அதிகாரம். இவர்களை விடுதலை வீரர்கள் என பலர் எண்ணிக் கொண்டிருக்கும் தவறான மயக்கத்திற்கான காரணம் இவர்கள் பசுத் தோல் போர்த்த புலிபோல தமிழ்பேசும் மக்களின் உரிமைகளுக்காக போராட்டம் என்ற பெயரினுள் புகுந்து கொண்டு தமது அதிகார வெறிக்கான பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுதான். இந்தக் கபட வேடம் மிகச் சுலபமான கேள்விகளின் முன்னால் அம்பலமாகி விடக்கூடிய பலவீனம் இருந்தும் கூட, இவர்களை இட்டு இந்த மயக்கத்திற்கு உட்பட்டவர்களின் கண்களுக்கு இது புலப்படுவதாயில்லை. தமிழ் பேசும் மக்களுடைய போராட்டம் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்கும், சுதந்திரத்தை மீட்டு எடுப்பதற்கும் ஆன போராட்டமாகும். ஆனால் அதை நடத்துவதாகக்கூறிக் கொள்ளும் புலிகளோ இதற்கு எதிர் மாறாக ஜனநாயகத்தை மறுத்து, மக்களின் சுதந்திரத்தை மறுப்பவர்களாக உள்ளார்கள். இப்படி இருக்க இவர்களை எப்படி உரிமைகளுக்காகப் போராடுபவர்களாக் கருத முடியும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் எமது போராட்ட வரலாற்றில் மூன்று முக்கிய வரலாற்றுத் தவறுகளை இழைத்ததன் மூலம் ஈழ விடுதலையை நாசப்படுத்தி வரலாற்றின் நிந்தனைக் குரியவர்களாகி விட்டார்கள். இவர்கள் இழைத்த முதலாவது



படிப்பகம்

www.padippakam.com

வரலாற்றுத் தவறு, விடுதலை இயக்கங்களின் ஐக்கியத்தைக் குலைத்தது. இதன் மூலம் ஒன்றுபட்ட சக்தியாக பரிணமித்து வந்த எமது போராட்ட பலம் சிதைக்கப்பட்டதுடன் மக்களின் நம்பிக்கைகள் நொருங்கிப் போயின. போராட்டத்திற்கு உள்ளேயே பிளவுகள் ஏற்பட்டு இப் பிளவுகளில் மக்களும் ஆதரவாளர்களெனக் கூறுபோடப்பட்டு தமக்குள்ளேயே யார் எதிரி யார் நண்பன் என்ற வரையறை அற்றுப்போன நிலையில் போராட்டமே சீர்குலைந்து போக வழி கோலியது. எமது ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இயக்க மோதல்கள் என்று மக்களால் குறிப்பிடப்படும் மோதல்கள் என்றும் ஏற்பட்டதில்லை. மாறாக புலிகள் ஏனைய இயக்கங்களை நிர்மூலமாக்குவதை நோக்கமாகக் கொண்டு ஏனைய இயக்கங்களின் மேல் தாக்குதல் தொடுத்தார்கள். இத் தாக்குதல்களில் தலைவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பல்வேறுபட்ட இயக்கப் போராளிகளும் இவர்களால் கொலை செய்யப்பட்டனர். இதனால் பழி வாங்கும் உணர்ச்சியும் கோபதாபங்களுமே அதிகரித்தது. எந்த ஒரு இயக்கத்தையும் இவர்களால் முற்றாக அழிக்க முடியவில்லை. இதனால் சந்தேகப்படுபவர்கள் எல்லோருக்கும் ஓர் இயக்க முத்திரையைக் குத்தி கொலை செய்து வருகின்றார்கள். இதனால் புலிகளுக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் இடையில் ஓர் ஐக்கியம் ஏற்படுவதை அவர்கள் முற்றுமுழுதாக இல்லாது ஒழித்துள்ளார்கள்.

இரண்டாவது வரலாற்றுத் தவறு எமது நட்பு சக்தியான இந்தியாவுடன் மோதி அதை விரோதித்துக் கொண்டதாகும். ஏனைய இயக்கங்களை விரோதித்த புலிகள் வட மராட்சியை சிறீலங்கா இராணுவத்திடம் இழந்து, பலவீனமடைந்துபோய் இருந்த நேரத்தில் இப் பிரச்சனைக்கு ஓர் தீர்வு காணும் முகமாக இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒன்று 1987ம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் மூலம் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஓர் அரசியல் தீர்வு ஒன்றும் உருவாக்கப்பட்டது. இத் தீர்வு முழுமையான தீர்வாக இல்லாதிருந்தபோதும், அதனை ஏற்றுக்கொண்டு, இந்தியா வின் துணையுடன் அதனை மேம்படுத்தியிருப்பதே சாணக்கியமானதாய் இருந்திருக்க முடியும். ஆனால் உத்திர வாதியாக இருந்த இந்தியாவை விரோதித்து அவர்களுடன்



படிப்பகம்

www.padippakam.com

யுத்தம் தொடங்கியதானது இலங்கை அரசாங்கம் தனது பக்கத்தில் நிறைவேற்ற வேண்டிய பல கடமைகளை நிறை வேற்றாமல் தட்டிக் கழித்துச் செல்ல வழி வகுத்தது. இது எமது வரலாற்றில் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பத்தைப் பாழாக்கியது மட்டுமன்றி, எமது மக்களையும் சொல்லொணா இன்னல்களுக்குள்ளாக்கியது. இதன் உச்சக்கட்டமாக இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியை இந்திய மண்ணிலேயே படுகொலை செய்த துரோகத் தனமான செய்கைகளினால் எமது போராட்டத்தையே சர்வதேச அரங்கில் ஓர் பயங்கரவாதப் போராட்டமாக மாசு படுத்தி விட்டது. இதன் மூலம் முன்னர் இந்திய மத்திய அரசுடன் பகைத்துக்கொண்ட நிலைமையை மோசமாக்கி தமிழ் நாட்டரசின் பகையையும் சம்பாதித்துக் கொண்டது. இது தனிப்பட்ட விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாதக் குழுவுக்கு அதன் செய்கையால் ஏற்பட்ட கதி என்பது உண்மைதானெனினும், எமது மக்களுக்கும் அவர்களது எதிர்கால வாழ்வுக்கும் இது பெரும் பாதிப்புக் களை ஏற்படுத்தியுள்ளது. புலிகள் எமது மக்களை பணயக் கைதிகளாக்கி போராட்டத்தை பலவந்தமாக தமது போக்கிற்கு இழுத்துச் செல்வதனால், இந்தியாவால் எமது மக்களுக்கு உதவிக்கரம் கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்திய மக்களும், தமிழக மக்களும் முற்று முழுதாக இலங்கைத் தமிழ்மக்களை விரோதித்துக் கொள்ளும் போக்கும், அவர்களை எதிரிகளாகப் பார்க்கும் நிலையும் தோன்றியுள்ளது. இலங்கை அரசின் கண்மூடித்தனமான தாக்குதல்களைக் கூட இந்தியா கண்டும் காணாமல் இருக்க முயற்சிக்கின்றது. இதனால் அழிவு எமது மக்களுக்கே. மக்கள் எவ்வளவு பேர் அழிந்தாலும் புலிகள் அதனைப் பற்றி சிறிதளவாவது அக்கறைப்படுவது கிடையாது என்பது யாவரும் அறிந்ததுதானே. புலிகளின் இப்படியான பகுத்தறிவற்ற கொலைகாரத்தனமான நடவடிக்கைகளால் இந்தியா குறிப்பாக தமிழ்நாடு அங்குள்ள தமிழ் அகதிகளை திரும்ப அனுப்ப வேண்டும் என்ற முடிவுக்கு வர வழிவகுத்தது.

மேலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இலங்கை என்ற எல்லையையும் தாண்டி இந்தியாவுக்கும் அச்சுறுத்தலாக மாறிவிட்டன. அவர்கள் ஒருபுறம் தமது சட்டவிரோத போதைப்



படிப்பகம்

www.padippakam.com

பொருள் மற்றும் தங்கம், தீர்வைப் பொருட்கள் ஆகியவற்றின் கடத்தலுக்கான மையமாக இந்தியாவை பயன்படுத்தி இந்தியாவின் சமூக வாழ்வுக்கு பங்கம் விளைவிக்கக்கூடிய அளவுக்கு இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு வந்தனர். மறுபுறம் ஆயுதம் மற்றும் வெடிமருந்துகளை கடத்துவதற்கான களமாகவும் இந்தியாவை பாவித்துக் கொண்டு இந்தியாவில் இருந்த தீவிரவாத இயக்கங்களுடன் இரகசிய உறவுகளை ஏற்படுத்திக்கொண்டு அவற்றிற்கு ஆயுத உதவியும் வழங்கி வந்தனர். இது மாத்திரமின்றி அதிதீவிர உணர்வுடைய தமிழ்நாட்டு இளைஞர்கள் சிலரை தனது வலையில் சிக்க வைத்து அவர்களுக்கு பயிற்சியும் ஆயுதமும் அளித்து, தனக்காகச் செயற்படும் ஏவற்படையொன்றை அங்கேயே அமைத்தும் உள்ளனர். இத்தகைய செயற்பாடு களினால் இந்தியாவை ஈழ விடுதலை குறித்த விடயத்தில் இந்தியாவிற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் பற்றி அதிக கவலை கொள்ளும் படி ஆக்கி விட்டது. எமது அண்டை நாடும், நட்பு நாடும், எமது பிரச்சனையில் கூடுதலான அக்கறை கொண்டிருப்பதுமான இந்தியாவுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் சொந்த ஆதிக்க நலன் கருதி, மக்களின் நலனைப் பற்றிச் சிந்திக்காமல் ஏற்படுத்திக் கொண்ட இந்தப் பகைமை அது இழைத்த இரண்டாவது மாபெரும் வரலாற்றுத் தவறாகும்.

அடுத்ததாக அது இழைத்த மூன்றாவது வரலாற்றுத் தவறு, முஸ்லீம் மக்களை எதிரியாக்க் கருதி தாக்குதல் தொடுத்ததன் மூலம் முஸ்லீம் தமிழ் மக்களிடையேயான நல்லுறவை சீர் குலைத்தது. காத்தான்குடி பள்ளிவாசலுக்குள் புகுந்து அங்கு தொழுது கொண்டிருந்த மக்களை கண்மூடித்தனமாக கொலை செய்ததன் மூலம் எதிர்ப்புணர்வை புலிகள் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். முன்னரும் இவர்களால் இப்படியான கொலைகள் செய்யப்பட்ட போதும் அவை மூடி மறைக்கப்பட்டு வந்தன. எவ்வாறு சக இயக்கங்களுக்கெதிரான தனது தாக்குதல்களை ஆரம்பத்தில் மூடிமறைத்து மேற் கொண்டு வந்து ஒரு கட்டத்துடன் பகிரங்கமாகவே செய்யுமளவிற்கு அதன் வெறி வளர்ந்து வந்ததோ, அதைப் போலவே முஸ்லீம் மக்களின் தாக்குதல்களிலும் பின்னர்



படிப்பகம்

www.padippakam.com

பகிரங்கமாக வெறித்தனத்தைக் காண்பிக்கத் துணிந்தனர். இதன் விளைவாக யாழ் குடா நாட்டில் தமிழ் மக்களுடன் அந்நியோன்னியமாக வாழ்ந்து வந்த, ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு தமது ஆதரவை நல்கி வந்த, 50,000 முஸ்லீம் மக்களை இருபத்திநாலு மணித்தியாலத்துள் உடுத்த துணியுடன் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மண்ணையும் சேர்த்த சொத்துக்களையும் கைவிட்டு, யாழ்குடாநாட்டைவிட்டு வெளியேறும்படி துரத்தினர். இதே போல் மன்னார் முஸ்லீம் மக்களையும் தமது பிரதேசத்தில் இருந்து துரத்தினர். மட்டக்களப்பு, அம்பாறை முஸ்லீம் கிராமங்கள் மீது தாக்குதல் தொடுத்து கொலைகளும், கொள்ளைகளும் நடத்தினர். இவ்வாறு காலகாலமாக ஒன்றுபட்டு வாழ்ந்து வந்த முஸ்லீம் தமிழ் மக்களின் சக வாழ்வுக்குச் சாவு மணி அடித்தனர்.

புலிகளின் தாக்குதல்களில் இருந்து முஸ்லீம் மக்களைக் காப்பாற்றவென கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் ஊர்காவல் படைகள் அமைக்கப்பட்டன. ஆனால் இவை புலிகளுக்குப் போட்டியாக தமிழ் மக்களை படுகொலை செய்வது, அவர்கள் பொருட்களைக் கொள்ளை அடிப்பதுமாகவே உள்ளனர். இது அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட குழுவாகையால் இவர்களுக்கு இராணுவமும் ஒத்தாசை புரிகின்றது. பல்வேறுபட்ட தமிழ்க் கிராமங்கள் சூறையாடப்பட்டதற்கும், எரியூட்டப்பட்டதற்கும் இவர்களே காரணம். தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்புணர்வு உருவாக இவர்களும் காரணமாக உள்ளார்கள்.

எமது மக்களின் அரசியல் உரிமைகள் குறித்த விடயத்தில் நாம் எதிர் நோக்கும் மிகப் பெரிய சவால் வட கிழக்கை பிரிப்பதற்கான முயற்சியாகும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட வடகிழக்கு மாகாணமானது நிரந்தரமாக இணைக்கப் படாமல் ஓர் தற்காலிக ஏற்பாடாகவே இருந்தது. கிழக்கில் ஓர் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்துவதன் மூலமே இணைப்பு நிரந்தரமாக்கப்படும் என அது கூறியது. இப்படியான சூழ்நிலையில் கிழக்கு மாகாண முஸ்லீம் மக்கள் இதர தமிழ் மக்களுடன் ஒன்றுபட்டு வாழ உறுதிப்பாட்டை தெரிவிப்பதானது இச்சவாலை எதிர்கொள்ள மிகமிக அத்தியாவசியமான ஒன்று.



படிப்பகம்

www.padippakam.com

முஸ்லீம் மக்களுக்குரிய அச்சங்களைப் போக்கி அவர்களின் நல்லெண்ணத்தையும் வென்றெடுக்க வேண்டிய ஒரு நிலையில், இதற்கு நேர் விரோதமாக அதிகார வெறி கொண்ட விடுதலைப் புலிகள் தொடுத்துள்ள இப்படியான யுத்தம் தமிழ் பேசும் மக்களின் எதிர் காலத்தை படுகுழியில் தள்ளுவதைத் தவிர வேறொன்றையும் சாதிக்க வல்லதல்ல.

விடுதலைப் புலிகள் ஏற்படுத்திவிட்ட இத்தகைய சூழ்நிலை முஸ்லீம் மக்களையும் தமிழ் மக்களையும் பிரித்து விட ஆரம்பம் முதல் முயற்சி செய்து வரும் சிறீலங்கா அரசுக்கு மிகவும் வாய்ப்பாக அமைந்து விட்டது. இதன் மூலம் இந்த புலிகளின் முஸ்லீம் எதிர்ப்பை நிரந்தர முஸ்லீம் தமிழ் பிரிவினையாக மாற்றி விட எத்தனிக்கின்றது. விடுதலைப் புலிகளோ இத்தகைய செயற்பாட்டின் மூலம் கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம் ஊர்காவற் படையின் தாக்குதலுக்கு பயந்து தமிழ் மக்கள் பாதுகாப்பிற்காக தங்களையே நம்பி இருக்கும் சூழ்நிலையை உருவாக்கி அங்கே குறைந்து செல்லும் தமக்கான ஆதரவை, முன்னர் தமிழ் மக்களுக்கு சிங்கள எதிர்ப்பு இனவாத உணர்வுகளைத் தூண்டி அதை ஆதாயமாக்கிக் கொண்டு வந்தது போல், இப்போது முஸ்லீம் எதிர்ப்பு இனவாத உணர்வுகளையும் தூண்டி அதில் குளிர் காயலாம் என நினைக்கிறது. இத்தகைய செயற்பாடுகளுக்குப் பின்னணியில் அன்னிய சக்திகள்கூட இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இவ்வாறாக அது இழைத்த பாரதூரமான மூன்று வரலாற்றுத் தவறுகள் மூலம் தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்து அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளது. அது தனது முதலாவது தவறில் போராட்ட இயக்கங்களின் ஐக்கியத்தைக் குறைத்ததன் மூலம் சக இயக்கங்களிடம் இருந்தும் அவற்றின் ஆதரவாளர்களிடம் இருந்தும் தம்மை அந்நியப்படுத்திக் கொண்டது. தனது இரண்டாவது தவறில் இந்தியாவைப் பகைத்துக் கொண்டதன் மூலம் எமது வல்லமை மிக்கதொரு நட்பு சக்தியிடம் இருந்தும் அதன் ஆதரவு நாடுகளிடம் இருந்தும் தம்மை அந்நியப்படுத்திக் கொண்டது. தனது மூன்றாவது தவறின் மூலம் தமது மக்களோடு



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றிணைந்த ஓர் கணிசமான மக்கள் தொகையைக் கொண்ட சிறுபான்மை முஸ்லீம் சமூகத்திடம் இருந்தும் தன்னை அந்நியப்படுத்திக் கொண்டது. இதன் மூலம் தான் தனிமைப்பட்டுப் போனதும் அல்லாது தமிழ் மக்களின் மீதும் தனது இச் செயற்பாடுகளின் விளைவுகளை சுமத்தியுள்ளது.

இன்று புலிகள் மக்களைக் கேடயமாக்கி தனது யுத்தத்தை நடாத்தி வருகின்றது. யாழ் குடா நாட்டில் மக்களைக் குறிப்பாக இளைஞர்களையும், யுவதிகளையும் அங்கிருந்து வெளியேற முடியாமல் தடை செய்து தனது யுத்தத்தில் பலி கொடுக்க ஆட்பலம் தேடுகிறது. இதே வேளை இம்மக்களுக்கு வழங்கப்படும் அகதி நிவாரணங்களை தான் சுருட்டிக் கொண்டு மிகுதியையே மக்களுக்கு செல்ல அனுமதிக்கின்றது. அத்துடன் வியாபாரப் பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் யாவற்றிலும் வரி அறவிடப்படுவதுடன் போக்குவரத்துச் சேவை முதற் கொண்டு சகல சேவைகளுக்கும் மிகமிக அதிக அளவு விலைகளை உயர்த்தி உள்ளது. இதனால் கிடைக்கும் முழு வருமானமும் இவர்களுக்கே போய்ச் சேருகின்றது. இதன் மூலம் விலைவாசி அதிகரிக்கின்றது. ஒவ்வொரு குடும்பத்தினரும் இவர்களுக்கு தங்கம் கட்ட வேண்டும் என்ற சட்டமும் இடப்பட்டுள்ளது. மேலும் வியாபாரிகள் தனவந்தர்களிடம் இருந்து பெருந் தொகையான பணத்தை மிரட்டிப் பெறுவதுடன் மக்களின் வீடுகளையும் இஷ்டம் போல பறிமுதல் செய்து பாவித்து வருகின்றது. குடாநாட்டை விட்டு வெளியேறுபவர்கள் வீடுகளை விற்க முடியாது என அறிவித்துள்ளதுடன் வெளிநாடு சென்றவர்களின் வீடுகளை தமக்காக சுவீகரித்துக் கொள்கின்றது. இத்தகைய நிலையில் இலங்கை அரசின் தாக்குதல்களுக்கும், விடுதலைப் புலிகளின் ஒடுக்குமுறை கெடுபிடிகளுக்கும் மத்தியில் எமது மக்கள் நிதம்நிதம் வேதனைகளை அனுபவித்து வாழ்ந்து வருகிறார்கள்.

அடுத்ததாக நான் முன்னர் சுட்டிக் காட்டியபடி தற்போது ஏற்பட்டிருக்கும் புதிய சூழ்நிலையில் நாம் மறுபரிசீலனைக்கு உட்படுத்தி முடிவெடுக்க வேண்டிய சில விடயங்களை குறிப்பிட லாமென்று நினைக்கிறேன். அதாவது முதலாவது காங்கிரசில் ஈழ விடுதலையை இலக்காகக் கொண்ட எமது அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

திட்டத்திலும், வேலைத் திட்டத்திலும் அமையப்போகும் உத்தேச ஈழத்தில் முஸ்லீம் மக்களுக்கான தீர்வு, மலையக மக்களுக்கான தீர்வு என்பன குறித்து சில நிலைப்பாடுகளை எடுத்திருந்தோம். இன்று அவற்றை நாம் ஐக்கிய இலங்கைக்குள் எப்படியான தீர்வுகளாக வரையறுக்கலாம் என்பதையிட்டு தெளிவான முடிவ ,களுக்கு வரவேண்டும். ஈழம் ஒரு சோசலிச நாடாக அமையு மென்ற பார்வையில் நாம் வகுத்த முடிவுகள்தான் இன்றைய முதலாளித்துவ அரசாட்சி நிலவும் இலங்கையில் எவ்வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது நடைமுறை யதார்த் தங்களுடன் சிந்திக்கப்பட வேண்டிய ஓர் விடயம். இப்படிக் கூறுவதன் மூலம் நமது போராட்டம் இந்த முதலாளித்துவ அரசியல் இலக்குகளை எய்துவது என்பதுடன் மட்டுப்படுத்தப் பட்டதாக த்வறான விளக்கம் கொள்ளலாகாது. ஆனால் நாம் இக்கட்டத்தைக் கடந்தாக வேண்டிய நிலையில் அதற்கமைய நாம் வகுக்க வேண்டிய இடைக்காலத் தீர்மானங்களாகவே நாம் இவற்றைக் கருத வேண்டும். அதேவேளை எமது நீண்ட கால இலக்கான ஒரு சமதர்ம நாட்டை நிறுவுவதற்கு இது உதவும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும். இவை குறித்து காங்கிரசின் தொடர்களில் நீங்கள் விவாதிப்பீர்கள் என நான் எதிர்பார்க்கிறேன்.

## மாறிவரும் சர்வதேச அரசியல் சூழ்நிலை

அடுத்ததாக இன்றைய சர்வதேச சூழ்நிலையையும் நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டும். இன்று உலக அரங்கில் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய மாற்றம் சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றமாகும். உலகின் மிகப் பெரிய சோசலிச நாடும், உலகப் புரட்சிகளுக்கு வித்திட்டதுமான சோவியத் யூனியன் இன்று பல நாடுகளாகப் பிரிந்து போனதுடன், கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியும் மாற்றப்பட்டு விட்டது. இதனால் உலகில் முதலாளித்துவ நாடுகளிற்கும், சோசலிச நாடுகளுக்குமிடையில் ஏற்பட்டிருந்த பனிப்போர் ஓர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வகையில் உலகம் இரு முகாம்களாக இருந்த நிலமை மாறிவிட்டது. அமெரிக்காவே எஜமான் எனும் போக்கு வளர்ந்து வருகின்றது. ஐக்கிய நாடுகள் சபை கூட ஒரு சிலரின் ஆதிக்கத்துக்குள் உள்ளாகும் போக்கே தென்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

இதனடிப்படையில் நாடுகளுக்கிடையிலான உறவுகள் மாற்றி அமைக்கப்படுகின்றன. இதைப் போலவே மற்றொரு சோசலிச நாடான யூகோஸ்லாவியாவிலும் தேசிய இனப் பிரச்சனை உச்ச நிலையை எய்தி அதுவும் 4 குடியரசுகளாக சிதறி விட்டது. இது மாத்திரமல்லாமல் கடந்த $1^1/_2$ வருடமாக அங்கு அழிவுகரமான யுத்தம் நடைபெற்றும் வருகின்றது. கிழக்கைரோப்பிய நாடுகள் யாவும், பல கட்சி ஜனநாயகம், சந்தைப் பொருளாதாரம் என்ற அடிப்படையில் சோசலிசத்தை குழிதோண்டிப் புதைத்து விட்டன. ஜனவரி 1, 1993இல் இருந்து செக்கோஸ்லோவாக் கியாவும் இரு நாடுகளாகி விட்டது. கிழக்கு ஜெர்மனியும், மேற்கு ஜெர்மனியும் இணைந்து ஒரே நாடாகியுள்ளன. ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் மேலும் இறுக்கமான கூட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு முயன்று வருகின்றன. மற்றொரு புறத்தில் இதுவரையில் எதிரும் புதிருமாக இருந்த இஸ்ரேலுக்கும் – பாலஸ்தீன விடுதலை இயக்கம் மற்றும் அரபு நாடுகளுக்கும் சமரசப் பேச்சுவார்த்தைகட்கான முன்னெடுப்புகள் முதற்தடவையாக ஆரம்பமாகியுள்ளது. இதுவரை இஸ்ரேலை அங்கீகரிக்காதிருந்த இந்தியா உட்பட பல நாடுகள் அதனை அங்கீகரிக்கும் வகையில் தமது வெளிநாட்டுக் கொள்கைகளை மாற்றிக் கொண்டுள்ளன. அதே போல் தென்னாப்பிரிக்காவிலும் மாற்றங்கள் தோன்றி வருகின்றன. நெல்சன் மண்டேலாவின் விடுதலையுடன் பேச்சுவார்த்தைகள் திருப்தி அளிக்கக் கூடியவகையில் தொடர்கின்றன. அங்கும் முன்பிருந்த கடும் போக்கான இனவாதக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. இப்படியான சூழ்நிலையில் எமது அண்டை நாடான இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கையிலும் பொருளாதாரக் கொள்கையிலும் ஏற்பட்டுவரும் மாற்றங் களையும் நாம் கவனத்திலெடுக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

அமெரிக்காவுடனான உறவில் வளர்ச்சி, அதற்கிணையாக சீனாவுடன் உறவை பலப்படுத்திக் கொள்ளல், இஸ்ரேலுடன் புது உறவு, உள்நாட்டில் தாராள பொருளாதாரக் கொள்கைகள் போன்றவை இந்தியாவின் புதிய நடவடிக்கைகளாகும். அதே சமயம் ஐ.நா.சபை மேலும் ஜனநாயகமயப்படுத்தப்பட



படிப்பகம்

www.padippakam.com

வேண்டும், இந்தியாவிற்கும் அதிகளவிலான அதிகாரங்கள் அங்கு வேண்டும் என்ற கூற்றுக்கள், அமெரிக்காவின் தனி வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்காகவே என்றே தோன்று கின்றது. இன்னும் இந்தியா தென்கிழக்காசியாவில் ஓர் வலிமை மிக்க சக்தியாகவே செயற்பட்டு வருகின்றது. எனவே இத்தகைய சூழ்நிலைகளை நாம் எமது கொள்கைகளை வகுப்பதில் கவனத்திலெடுத்துக் கொள்ள வேண்டும். அதாவது இவை எமக்குணர்த்துவது என்னவென்றால் நாம் வெறும் வறட்டுச் சூத்திரவாதிகளாக அல்லாமல் நடைமுறைவாதிகளாக சிந்திக்க வேண்டும் என்பதையே.

## முடிவாக

எனவே தோழர்களே, நாம் இன்று கூடியுள்ள இரண்டாவது காங்கிரஸ் மிக முக்கியமான பணிகளை நிறைவேற்ற வேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது. இதுவரை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆற்றிய பங்களிப்புக்கள் மகத்தானவை. ஆனால் இனிமேல் ஆற்றவேண்டிய கடமைகள்தான் இப்போது எமக்கு மிகவும் முக்கியமானவை. நாமோ இதுவரையிலான எமது பாதையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான விட்டுக் கொடுக்காத சளைக்காத போராட்டத்தை நடாத்தி வந்திருக்கின்றோம். ஜனநாயகத்திற் காக தொடர்ச்சியாகப் போராடி வந்துள்ளோம். இன ஐக்கியத் திற்கான புரிந்துணர்வுகளை ஏற்படுத்தவதற்கு தொடர்ந்து முயற்சித்து வந்துள்ளோம். விடுதலை இயக்கங்களிடையே ஐக்கியத்தை கட்டி எழுப்புவதில் மிகுந்த பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்துள்ளோம். புலிகள் சீர்குலைக்க முற்படும் தமிழர் முஸ்லீம் நல்லுறவை மேம்படுத்த தொடர்ந்து பாடுபட்டு வருகின்றோம். புலிகளால் பகைத்துக் கொள்ளப்பட்ட இந்தியாவுடனான நட்புறவை வலுப்படுத்தி எமது மக்களுக்கான பக்கபலமாக தொடர்ந்து பங்காற்றுமுகமாக ஊக்குவித்து வந்துள்ளோம். இதே வேளை சர்வதேச முற்போக்கு சக்தி களுடன் நல்லுறவைப் பேணி வந்துள்ளதுடன் நியாயமான போராட்டங்களுக்கான எமது ஆதரவைத் தெரிவித்தும் வந்துள் ளோம். எனவே நாம் இத்தகைய வரலாற்றுக் கடமைகளை சரிவரச் செய்துள்ளோமென்ற உறுதியுடன், தொடர்ந்து எமது



படிப்பகம்

www.padippakam.com

பாதையை வகுப்பதற்கான உற்சாகத்துடனும், தைரியத்துடனும் அதேவேளை மிகுந்த பொறுப்புணர்வுடனும் எமது இந்த இரண்டாவது காங்கிரசை ஆரம்பிப்போம்.

*ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் நீடூழி வாழ்க!*

*ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நீடூழி வாழ்க!*

*ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நீடுழி வாழ்க!!*

---

*"நாம் மக்களுக்காகப் போராடுவதென்பது எம்மீது சுமத்தப்பட்ட கடமையே தவிர எமக்கு வழங்கப்பட்ட அதிகாரமல்ல"*

*–தோழர்.க. பத்மநாபா*

"நாம் மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை. மக்களுக்காகவே மண்ணை நேசிக்கிறோம்."

– தோழர் க. பத்மநாபா



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சமூக, பொருளாதார விடுதலை என்ற கருத்து வரட்டுச் சூத்திரமாகி, நடைமுறையில் பாரதூரமான ஒன்றாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில்; இனப் பிரச்சினையிலிருந்து அந்நியப்பட்டு ஒதுங்கிப் போய் விடக்கூடாது என்பது ஒரு பக்கத்திலும், இன விடுதலைப் போராட்டம் என்றபோக்கு ஒரு பக்கமாக இழுபட்டுச் சென்று இனவெறியாகவும், வெறும் பழிவாங்கல் நடவடிக்கைகளாகவும், அவலட்சணமாகி விடக்கூடாது; என்பது மறுபக்கத்திலும் எம்மால் வலியுறுத்தப்பட்டு வந்தது. இதனடிப்படையில் நாம் வகுத்த பாதைதான் எம்மை இவ்விரு வகையான எல்லைகட்கும் இட்டுச்செல்லாமல் சரியான நிலைப்பாட்டில் வைத்திருந்தது.

*தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்*

படிப்பகம்